செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௪௭] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௩, ஐப்பசி (Nov. '72) [பரல்-௩

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சஎ	திருவள்ளுவர் ஆண்டு உ00ரு, ஐப்பசி நவம்பர் 1972	பரல் ரு

தேடித் தொகுத்தலும் பேணிக் காத்தலும்

தேடித் தொகுக்க வேண்டியவை: ஏட்டுச் சுவடிகள், பழம்பதிப்பு நூல்கள், பழைய இதழ்கள், புலவர் வரலாறுகள் கடிதங்கள், படங்கள், பல துறைகளில் புகழ் பெற்ற பெருமக்கள் வரலாறுகள், கடிதங்கள், படங்கள், கட்டுரைகள் நிறைந்த மலர்கள், கலைப் பொருள்கள் முதலியனவாகும். இவற்றைத் தேடித் தொகுத்தால்மட்டும் போதாது; தொகுத்தவற்றைப் பிறர்க்குத் தொடர்ந்து பயன்படுமாறு பேணிக் காத்தலும் வேண்டும்.

ஏட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுக்காமையாலும் பாது காவாமையாலும் எத்தனையோ அரிய நூல்களை யெல்லாம் இழந்துவிட்டோம். இன்றுங்கூட அச்சிடப் பெருத ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பெறுதற்கு அமைப்போ முயற்சியோ இல்லை. நம் தமிழ்நாட்டு ஏட்டுச் சுவடிகள் பல வெளிநாடுகளி லுள்ள நூல் நிலையங்களில் காணப் பெறுகின்றன் வென்று அந்நாடுகட்குச் சென்று வந்த கிருட்டிணகிரி அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் திரு. அ. கிருட்டிணமூர்த்தியும் அவரைப் போன்ற அறிஞர் சிலரும் சொல்லுகின்றனர்.

ஏட்டுச் சுவடிகள் ஒருபுறமிருக்க அச்சிடப்பெற்ற பழந்தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதிலும் நம்மவர்கட்கு

அக்கறை இல்லை. அங்ஙனம் பழைய நூல்களைத் தொகுத்து வரும் பழம் புத்தக வணிகர் திரு தி. என். செயவேலு அவர்களிட மிருந்து அரிய பல நூல்களை வெளிநாட்டறிஞர்கள் பன்மடங்கு விலை கொடுத்துத் தம் நாட்டு நூலகங்கட்கு வாங்கிச் செல்லு கின்றனர். ஆனால், அவற்றை நம் தமிழ்நாட்டுச் செல்வர்களோ, நூலகங்களோ, திருமடங்களோ, அவ்வணிகர் குறிப்பிடும் மிகுவிலை கொடுத்து வாங்குவதில்லை என்பது மிகவும் வருந்து தற்குரியது.

(1) ஏட்டுச்சுவடிகள்

முதுபெரும்புலவர் **டாக்டர் வே. சாமிநாதையர்** அவர் களோ, சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரி திரு. **சி. வை. தாமோதரனாரவர்களோ** இவ்விருவரைப்போல் இன்னும் ஒரு சிலரோ ஏட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்து அவற்றைப் படியெடுத்து அச்சுக்குக் கொண்டுவராமற் போ யிருப்பின் எத்தனையோ அரிய தமிழ் நூல்களை நாம் இழந் திருப்போம்.

இவர்கள் பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பெறுவதற்கும் அச்சுவடிகள் இருந்த நிலைமையினைக் கொண்டு அச்சிடுவதற்கும் தாங்கள் எடுத்த பேருழைப்பினையும் பட்ட இடர்ப்பாட்டினையும், தொல்லையினையும்பற்றி அந்நூல்களின் முன்னுரைகளில் எழுதியுள்ளார்கள். அக் குறிப்புக்களைப் படிக் கின்ற நாம் அவர்களை நினைந்து கைகூப்பி வணங்குவதோடு அவர்கள் சென்ற வழியிற் சென்று மேலும் கிடைக்கப் பெறும்படி யான ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பெற்று அச்சுக்குக் கொண்டு வருதலும் அச்சிடப் பெற்ற நூல்களிற் காணும் பிழைகளைத் திருத்தி வேறு பதிப்புக்கள் கொண்டுவருதலுமே அவர்கட்குச் செய்யுங் கைம்மாறாகும்.

'பதிப்புத்துறையில் பட்டறிவு' என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி 45, 46 ஆம் சிலம்புகளில் யான் எழுதிய எட்டுக் கட்டுரைகளில் முதுபெரும்புலவர் டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் ஏடுகளைத் தேடித் தொகுத்து அச்சிட்டமையினைப் பற்றிச் சில குறிப்புக்களை வெளியிட்டேன். பவானிப் புலவர் திரு கு. குமாரசாமிப்பிள்ளையவர்களுக்கு டாக்டர் ஐயர் அவர்கள் 1919 முதல் 1936 வரை எழுதிய நான்கு கடிதங்கள் திரு பிள்ளையவர்களின் மகனாரும் கழகத்திலே ஓராண்டுக் காலம் புலமைத் தொண்டு ஆற்றியவருமான திரு கு. ஞானசம்பந்தம் அவர்களிடமிருந்து அண்மையிற் கிடைக்கப் பெற்றேன். இக்

கடிதங்கள் வாயிலாக 1942 இல் தமது 88 ஆம் அகவையில் இறையடி சேர்ந்த அம் முதுதமிழ்ப் பேரறிஞர் 1936 ஆம் ஆண்டு 82 ஆம் அகவையில் மிகவுந் தளர்ச்சியுற்ற உடல் நிலையிலுங் கூட ஏட்டுச் சுவடிகளை மேலுந் தேடித் தொகுத்தல் வேண்டு மென்று எத்துணை அவாக் கொண்டிருந்தனர் என்பது புலப்பட்டு நமது நெஞ்சை உருக்குவதாகின்றது. அவர்களோடு ஒப்பிடு தற்கு நம் கண்முன் ஒருவர்கூடத் தோன்றவில்லையே என்று வருந்தவும் வேண்டியதாகிறது.

30—10—1919இல் எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டிருப்பது :

"*தாங்கள் 28—10—1919இல் அன்புடன் அனுப்பிய கடிதம் வந்தது. தங்களுக்குக் *குழந்தை பிறந்து சௌகரிய மாக இருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.*

தங்களுக்கு அவகாசப்பட்டவுடன் **பழம் பிரதிகளைத் தேடும் விஷயத்தைக் கவனிக்கலாம்.** *அதனுற் பாதகமில்லை. நிற்க,* **இன்ன இடத்தில் இன்ன சுவடியுண்டென்று அறிந்தெழுதி னுலே போதும்.**"

24—11—1927இல் திருவாவடுதுறையிலிருந்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது :

"*தாங்கள் 13ஆம் தேதி எழுதிய கடிதமும், அதற்கு முன் சி. பழனியப்பனிடம் கொடுத்தனுப்பிய* **†தொல் - சொல் - உரையும்** *அவ்வப்பொழுதே வரப்பெற்று எல்லாம் தெரிந்து கொண்டேன். அந்தக் கடிதம் சென்னைக்குத் தான் வந்தது. இங்கே நான் வந்து ஒரு வாரமாகின்றது. அடிக்கடி அயலூருக்குப் போய்வந்து கொண்டிருந்தமையால் உடனே விடையனுப்ப முடியவில்லை. மேற்படி சுவடியை அனுப்பிய விஷயத்தில் மிக்க நன்றியுடையேன்.*

அதனிறுதியிலுள்ள ‡'தமிழ்நெறி விளக்கம்' என்பது முதலும் இறுதியுமில்லாம லிருக்கின்றனவே. *வேறு எங்காவது கிடைக்குமாவென்று கூடுமானல் விசாரிக்க வேண்டும்.*

---

*குழந்தை என்பது திரு கு. ஞானசம்பந்தரைக் குறிப்பதாகும்.

†தொல் - சொல் - உரை என்பது தெய்வச்சிலையார் எழுதிய உரையினைக் குறிக்கும்.

‡இக் கடிதத்திற் குறிப்பிடப்பெற்ற 'தமிழ்நெறி விளக்கம்' என்ற இலக்கண நூலை 1937 ஆம் ஆண்டில் டாக்டர் ஐயரவர்கள் பதிப் பித்து வெளியிட்டுள்ளனர்.

சென்னையில் [1]என் குமாரன் கலியாணசுந்தரமும், [2]சி. துரைசாமி ஐயரும், [3]ம-ா-ா-ஸ்ரீ இ. வை. அநந்த ராமையர் முதலியோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். அடிக்கடி தங்களை விசாரிப்பார்கள்.

அவரவர் சம்பள விவரம் :

1.	ஹைகோர்டு டிரான்சிலேட்டர்	ரூ. 80
2.	மயிலையில் பி. எஸ். ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்	ரூ. 40
3.	பிரசிடென்சி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் (இவர் கலித்தொகை உரையினை 3 பகுதிகளாக விளக்கத்துடன் பதிப்பித்தவர்)	ரூ. 100

தங்கள் சம்பளம் இப்போது எவ்வளவு? இனி எவ்வளவு கிடைக்கும்? **இன்னும் ஏட்டுச்சுவடிகள் எங்கெங்கே கிடைக்குமென்பதை விசாரிக்கவும் பார்க்கவும் விரும்புகிறேன்.''**

18—4—1936இல் எழுதிய கடிதத்திற் குறிப்பிடுவது :

"தங்களையும் தங்கள் கடிதத்தையும் பார்த்துப் பல நாளாயின. அந்தப் பக்கத்திற்கு வந்து வேண்டிய புஸ்தகங்களைத் தேட எண்ணியிருந்தும், இப்பொழுதுள்ள தேகஸ்திதியினால் அங்ஙனம் செய்யக்கூடவில்லை.

தாங்கள் முன்பு அளித்த **'தமிழ் நெறி விளக்கம்'** என்னும் குறை நூலை ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறேன். அது, **தமிழிலுள்ள ஐந்திலக்கணங்களையும் தெரிவிப்பதென்றும், அதில் அகப்பொருளிலக்கணத்தின் பகுதியே இப்பொழுது கிடைத்திருக்கும் பாகமென்றும் தெரியவருகிறது.**

ஷை நூலின் முழுப் பகுதியும் உள்ள புஸ்தகம் எங்கிருக்கிறதோ தெரியவில்லை. கொங்கு நாட்டிற் பண்டைக் காலத்திற் சிறந்த இலக்கண இலக்கிய நூல்களும் உரைகளும் இயற்றப்பட்டனவென்று அறியப்படுகிறது; இக் கருத்துக்கு, **பெருங்கதை, சிலப்பதிகாரத்திற்குரிய அடியார்க்கு நல்லாருரை என்பவைகளே சாக்ஷி.**

இந்நூல் எங்கே கிடைக்கு மென்பதை ஆராய்ந்து தாங்கள் முயன்றால் கிடைக்கலாமென்று நினைக்கின்றேன்.

பிரயாணச் செலவுக்கு என்ன வேண்டுமோ, அதனை அனுப்பு கிறேன். புஸ்தகம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் உசிதமான தொகையை விரும்புவராயினும் கொடுக்கலாம்.

பழைய நூல்கள் நல்ல வடிவத்தோடு திருத்தமான பதிப்பாக வெளிவந்து பலருக்கும் பயன்பட வேண்டுமென்று எனக்கு உண்டாயிருக்கும் எண்ணம், தேகம் தளர்ச்சியடைந்தும் நீங்க வில்லை.

ஸமீபமான இடங்களாயின் சனி ஞாயிறுகளிற் சென்றும் பார்த்து வரலாம்.

கவுண்டன்பாளையத்தில் நரிப்புலவர் வீட்டில் ஒரு வண்டிச் சுமைக்குமேற் சுவடிகள் இருந்தன. பாதிச் சுவடிகளை நான் பார்த்தேன். விசேஷமான புஸ்தகமொன்றும் இல்லை.

இவ்விஷயத்தில் தங்கட்குள்ள கருத்தைத் தெரிந்து கொள்ளும் விருப்பமுடையவனாக இருக்கிறேன். விடைக் கடிதத்தை ஒவ்வொரு நாளும் எதிர்பார்க்கிறேன்.

மதுரை ஜில்லாவில் சில இடங்களில் இந்நூல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவ்விடங்களிலும் தேடும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனாலும் முதலில் தங்களால் அதைப் பற்றித் தெரிந்து கொண்டமையால் தங்கள் முயற்சிதான் சிறப்புடையதாக இருக்கும்.''

இக் கடிதத்தில் டாக்டர் ஐயர் அவர்கள் தமது 82ஆவது அகவையில் ''பழைய நூல்கள் நல்ல வடிவத்தோடு திருத்தமான பதிப்பாக வெளிவந்து பலருக்கும் பயன்பட வேண்டுமென்று எனக்கு உண்டாயிருக்கும் எண்ணம் தேகம் தளர்ச்சியடைந்தும் நீங்கவில்லை,'' என்று எழுதியிருப்பது காண ஒரு பக்கம் வியப்பும் மற்றொரு பக்கம் நாணமும் அடைய வேண்டியவர்களா யிருக்கிறோம்.

1—5—1936இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில அரிய குறிப்புக்களைக் காண நாம் ஒன்றுஞ் செய்யாமல் வாளாவிருக்கின்றோமே என்று நாணித் தலைகுனிய வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

''கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் தெய்வச்சிலையார் உரைப்பிரதி இரண்டு அனுப்பியதும் பிறவும் தெரிந்து சந்தோஷம் அடைந்தேன். ஷை பிரதி தங்களுக்கு ஒன்று அனுப்பும்படி இனி எழுதுவேன்,

தெய்வச்சிலையாருரை ஏட்டுப்பிரதியை இன்னும் ஒரு முறை பார்வையிட்டு அனுப்புவதாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் எழுதியிருக்கிறார்கள். அந்தப்படியே செய்து முடித்தவுடன் வருவித்தேனும் நேரே அவர்களைக் கொண் டேனும் அந்த ஏட்டுப் பிரதியைத் தங்களுக்கு அனுப்பச் செய்வேன். நிற்க.

தாங்கள் எனக்கு அனுப்பிய ஏட்டுப் பிரதிகளாவன இந்தத் தெய்வச்சிலையாருரையேடும், அதனுடன் முன்பின் குறைந்திருந்த தமிழ்நெறி விளக்கமும், காரிகைப் பிரதி ஒன்றும், இருபது ஏடுகள் அடங்கிய ஒரு சிறு சுவடியுமே. வேறொன்றுமில்லை. இப்பொழுது குறுந்தொகை பதவுரை, விரிவான விசேடவுரை, குறிப்புரைகளுடன் பதிப்பிக்கப் பெற்று வருகின்றது. 1000 பக்கத்திற்குக் குறையா தென்று எண்ணுகிறேன். அதற்கு அவசியம் நான் இங்கிருந்து தீரவேண்டியிருக்கிறது. முடித்துக் கண்ணால் பார்த்தால் தேகத்தில் வன்மையும் ஊக்கமும் உண்டாகுமென்று எண்ணுகின்றேன். இது முடிந்த பின்புதான் நான் அந்தப்பக்கம் வர இயலுமென்று எண்ணுகிறேன்.

குறுந்தொகையில் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும் பின் 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியுள்ளார் களென்று நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால் தெரிகின்றது. அவ்வுரை கிடைக்கவில்லை. ஷை உரை அந்தப் பக்கத்திற் கிடைத்தால் இந்தச் சமயத்தில் மிக உபகாரமாக இருக்கும். மூலம் மட்டும் கிடைத்தாலும் நல்லதே. சிவன் பிள்ளை (பிங்கல நிகண்டு பதிப்பாசிரியர்) தம்பால் அந்த உரை இருந்ததென்று வெளியிட்டிருந்தார்.

அவிநாசி உத்ஸவத்துக்கு அங்கே வந்திருப்பது தெரிந்தது. பிரயாணச் செலவு முதலியவற்றுக்காக இதனுடன் ரூ. 25 (இருபத்தைந்து) அனுப்பியிருக்கிறேன்.

எனக்கு வேண்டிய நூல்களின் பெயரைப் பின்னே தனியாக எழுதியிருக்கிறேன்.

வேண்டிய நூல்களின் பெயர்கள்

1. பெருங்கதை அல்லது உதயணன் கதை அல்லது கொங்குவேண் மாக்கதை—(இந்நூல் முன்னும் பின்னு மில்லாமல் என்னால் அச்சிட்டிருப்பது தெரியுமே).

2. பரிபாடல் எழுபது உரை அல்லது மூலம்.

3. பதிற்றுப்பத்து—உரை அல்லது மூலம்—இதன் முதற் பத்தும் பத்தாம் பத்தும் கிடைக்கவில்லை யென்பது தெரியுமே.

4. சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரை மதுரைக் காண்டத்தின் பிற்பகுதியுரையும் வஞ்சிக் காண்டத் தின் உரையும் ஷை நூலின் அரும்பதவுரை.

5. தமிழ்நெறி விளக்கத்தின் முற்பாகமும் பிற்பாகமும் இஃது ஐந்திலக்கணங்களையும் உடையதென்று தோற்றுகின்றது.

6. சிற்றட்டகம்.

7. தொல்காப்பியவுரைகள் — எந்தவுரையாயிருந்தாலும் எந்தப் பகுதிக்குரையாயிருந்தாலும் வேண்டுவனவே.

8. அவிநயம்.

9. வளையாபதி, குண்டலகேசி.

ஸ்ரீமான் பழைய கோட்டைப் பட்டகாரரைச் சேர்ந்த கவிராயர் வீட்டில் வளையாபதியென்று ஒன்று இருந்தது. அது பிற்காலத்து நூல். பழைய நூல் அன்று. அதை அனுப்ப வேண்டாம்.

ஏடுதேடும் இடங்களில் நூல்களின் மூலமேனும் உரையேனும் அவற்றுள் சிலசில ஏடுகளேனும் கிடைத்தாலும் நல்லதே. எட்டுத் தொகையுள் எந்தப் பகுதியிருந்தாலும் அவற்றுள் சில பாகம் இருந்தாலும் எல்லாம் சோதித்தற்கு வேண்டுவனவே. இன்னும் பழைய நூல்களாக எவை காணப்பட்டாலும் அவை எல்லாம் வேண்டியனவே.

ஏட்டுப் பிரதிகள் பார்க்க வேண்டிய ஊர்களுக்குத் தாங்கள் சென்று புலவர்கள், கவிராயர்கள், வித்துவான்கள் வீடுகளிலுள்ள ஏட்டுப் பிரதிகளைப் பார்க்கலாம். பார்த்து அவ்விடங்களிலுள்ள முக்கியமான ஏட்டுப் புஸ்தகங்களின் பெயர்களை ஜாப்தா செய்து அனுப்பினுல் வேண்டியவற்றைத் தங்களுக்குத் தெரிவித்துத் தங்கள் மூலமாகவே வருவித்துக் கொள்வேன். இப்படிப் பார்த்தால்தான் பழைய நூல்கள் இன்ன இன்ன உள்ளனவென்று தெரியவரும்.

கொங்கு நாட்டில் பெரிய வித்துவான்கள் இருந்ததாக எனக்குக் கிடைத்துள்ள நூல்களால் தெரிகின்றது. தங்களாலே தான் அவர்களுடைய பெயர்கள் பிரகாசப்பட வேண்டும்.

இக் கடிதமும் மணியார்டர் தொகையும் வந்து சேர்ந்த தற்குத் தங்கள் கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் பதித்த **தொல் - சொல்லதிகாரம் தெய்வச்சிலையார்** உரையைப் பற்றி யான் 'பதிப்புத்துறையில் பட்டறிவு' 2ஆவது கட்டுரையில் குறிப்பிட்டபோது, **முதுபெரும் புலவர் டாக்டர் சாமிநாதையரவர்கட்கு** அந்தச் சுவடி புலவர் **திரு. கு.** குமாரசாமி பிள்ளையவர்**களால்** கொடுக்கப் பெற்றதென்பது தெரியாது. எனவே, அந் நூலின் பதிப்பாசிரியர் திருவாளர் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தமது முன்னுரையில் எழுதியிருப்பதை மீண்டும் கீழே தருவது முதன்மையாகும்.

> "இதனைப் பேராசிரியர் உரை எனச் சிலர் கூறியமையால் அப் பெயரிட்டு நூலைப்பற்றி விளம்பரம் செய்யப் பட்டது. இங்ஙனமிருக்கையில் **முதுபெரும்புலவர் டாக்டர் சாமிநாதையரவர்**களிடம் இவ்வுரை யேடொன்றிருப்பதறிந்து அவர்களிடம் அதனை வேண்டிப் பெற்றேன். அதனை வைத்து ஒப்பு நோக்க இவ்விரு ஏடுகளினுமெய்திய வேறுபாடுகளை யெல்லாம் நூல் முன்னரே அச்சிடப் பெற்றிருந்தமையின் இடையிடையே இணைக்க வியலாமையின், பிற்சேர்க்கையாக அச்சிட்டு இறுதியில் இணைக்கலாயிற்று. நூலின் பெயரையும் டாக்டர் தந்த ஏட்டின் முன்னும் பின்னும் கண்டவாறு **தெய்வச்சிலையார்** உரை எனக் கொள்ளலாயிற்று. இவ்விரண்டாம் ஏடே நூலிற்குப் புத்துயிர் தந்தது. இதனாலும் டாக்டர் ஐயர் அவர்கட்குப் புகழ் பெருகுகின்றது."

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையினை அச்சிடுவதற்கு முன் ஏடு வேண்டிச் சுற்றறிக்கை அனுப்பியிருப்பின் புலவர் திரு. குமாரசாமி பிள்ளையவர்களிடமிருந்து நேராகவோ அல்லது டாக்டர் ஐயர் அவர்களிடமிருந்தோ கிடைக்கப் பெற்றிருக்கும். இவ்வுரை நூல் திருத்தத்துடன் உரையாசிரியரின் உண்மைப் பெயருடன் வெளி வருவதற்குக் காரணம் டாக்டர் ஐயர் அவர்களின் ஏடு தேடும் நன் முயற்சியேயாகும். எனவே, அவர்கட்கும் அவர்கட்கு அவ்வேட்டை அளித்த திரு குமாரசாமி பிள்ளையவர்கட்கும் தமிழுலகு நன்றி செலுத்துங் கடப்பாடுடையது.

(2) பழந்தமிழ்ப் பதிப்பு நூல்கள்

டாக்டர் ஐயர் அவர்கள் பழம் பதிப்பு நூல்களையும் ஏராளமாகத் தொகுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் பிரிவுக்குச் சில ஆண்டுகட்கு முன் இராயபுரம் மருத்துவமனையில் அறுவை மருத்துவஞ் செய்யப்பெற்றுத் தனியறையில் தங்கியிருந்தார்கள். அவர்கள் திருமகனுருடன் யான் சென்று டாக்டர் ஐயரவர்களைக் கண்டு வணங்கி நலம் வினவினேன். அப்போது அவர்கள் புன்முறுவலுடன் ''மூவருலா கிடைக்குமா? கிடைக்குமானல் எனக்கு ஒரு படி வாங்கி அனுப்பவும்'' என்று சொன்னுர்கள். அவர்கள் விரும்பியபடி பண்டிதர் அ. கோபாலையர் பதித்த மூவருலாவை வாங்கி அனுப்பி வைத்தேன். அவர்கள் பல ஆண்டுகள் தொகுத்து வைத்திருந்த தனித்தனி உலாக்களின் ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட்டுப் பாடவேறுபாடுகளும் குறிப்புக்களும் எழுதிவைத்திருந்தார்கள். அவர்கள் பிரிவுக்குப் பின் அவர்கள் திருமகனுரால் தமிழாசிரியர் வி. மு. சுப்பிரமணிய ஐயர் எழுதிய குறிப்புரை, ஆசிரியர், பாட்டுடைத் தலைவர்கள் ஆகியோர் வரலாறுகளைச் சேர்த்து, 1946ஆம் ஆண்டில் மூவருலா வெளியிடப் பெற்றது.

மருத்துவமனையில் துன்புற்றுத் தங்கியிருந்தபோதும் தமிழ் நூற்பதிப்பிலேயே அவர்கள் கருத்துச் செறிந்து கிடந்தது.

(3) புலவர் வரலாறுகள்

இனி டாக்டர் ஐயர் அவர்கள் புலவர் வரலாறுகள் தொகுத்தமை பற்றியும் நாம் தெரிந்து நன்றிக் கடன் ஆற்ற வேண்டியவர்களாகின்றேம்.

தாம் பெரு மதிப்பு வைத்து இளமைக் காலத்தில் ஐந்தாண்டுக் காலமே பாடங் கேட்ட தம் ஆசிரியர் மாபெரும் புலவர் மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் வரலாற்று நூலையும், 'என் சரித்திரம்' என்று தமது 44 ஆவது அகவை முடியவுள்ள வரலாற்றையும் கனம் கிருட்டிணையர், கோபால கிருட்டிண பாரதியார் ஆகியோர் வரலாறுகளையும், மற்றும் தாம் எழுதிய 'நான் கண்டதும் கேட்டதும்', 'புதியதும் பழையதும்' 'நல்லுரைக் கோவை' போன்ற நூல்களிலுள்ள வரலாற்றுக் குறிப்புக்களையும் தாம் ஆய்ந்து பதித்துள்ள நூல்களின் முகவுரைகளில் எழுதிய வரலாற்றுக் குறிப்புக்களையும் படிப்பவர் பேருவகையடைவர்.

அவர்கள் தமது பிற்கால 43 ஆண்டு வாழ்க்கை வரலாற்றை எழுத வாய்ப்பில்லாமற் போயினமை தமிழ் மக்கட்குப் பேரிழப்பே யாகும்.

மறைத்திரு மறைமலையடிகள் தமது 'சிந்தனைக் கட்டுரை' என்ற நூலின்கண் அதனை இயற்றிய காலம் வரையுள்ள தமது வரலாற்றை எழுதியுள்ளார்கள். அடிகளார் தம் வரலாற்றை நிறைவாகப் பெரிய நூலாக எழுதாமற் போயினமை வருந்துதற் குரியதே. வீரசிதம்பரனார் தமது வரலாற்றைச் செய்யுள் நடையில் 'சுயசரிதை' என்ற தலைப்பில் வெளியிட்டிருப்பதும், திரு. வி. கலியாண சுந்தரனார் தமது வரலாற்றைத் 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற தலைப்பிலும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை தமது வரலாற்றை 'என் கதை' என்ற தலைப்பிலும் வெளியிட்டிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

இனி டாக்டர் ஐயர் அவர்கள் புலவர் கடிதங்களைத் தொகுத்து வைத்திருப்பதும் போற்றி மகிழ்தற்குரியது. அக் கடிதங்களில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கப் பெறு கின்றன.

1961 ஆம் ஆண்டில் சென்னையில் கழக 1008 ஆவது வெளியீட்டு விழா இராசாசி மண்டபத்திலே மூன்று நாள்கள் கலைக் காட்சியுடன் கொண்டாடப் பெற்றது. காட்சியில் வைப்பதற்காகப் புலவர் கடிதங்களைத் தொகுக்கலானேன். டாக்டர் ஐயர் அவர்களிடம் தமக்கு வரப்பெற்ற பெரும்புலவர் களின் கடிதங்களெல்லாம் இருத்தல் வேண்டுமே என்று கருதி அவர்களுடைய மகன்வழிப் பெயரன் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களிடஞ் சென்று கேட்டேன். 'தங்கட்கு யார் யார் எழுதிய கடிதங்கள் வேண்டுமென்று எழுதிக் கொடுப்பின் அவற்றை மட்டும் எடுத்துத் தருகிறேன்' என்று உள்ளன்போடு கூறினார்கள். யான் புலவர் சிலர் பெயர்களைக் குறித்துக் கொடுத்து வந்தேன். அவர்கள் எடுத்துக் கொடுத்த கடிதங் களில் 22-9-1894 இல் திரு R. S. **வேதாசலம்பிள்ளை** (மறைமலை யடிகள்) அவர்கள் எழுதிய கடிதமும் 16-3-1926 இல் **பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்** அவர்கள் எழுதிய கடிதமும் இருந்தன. முன்னது செந்தமிழ்ச் செல்வி 46 ஆம் சிலம்பு முதற் பரலிலும் பின்னது மூன்றும் பரலிலும் வெளியிடப் பெற்றுள்ளன.

இங்ஙனம் அவர்கள் தொகுத்து வைத்துள்ள கடிதங்க ளெல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ அரிய வரலாற்றுக் குறிப்புக்களும் வியப்புறு செயற் குறிப்புக்களும் கிடைக்கப் பெறும் என்பதில் ஐயப்படுதற்கில்லை.

டாக்டர் ஐயர் அவர்கள் தேடித்தொகுத்துப் பேணிக் காத்து வைத்த ஏட்டுச் சுவடிகளும், பழந்தமிழ்ப் பதிப்பு நூல்களும், தமக்கு வரப்பெற்ற கடிதங்களும் தமக்குப்பின் நிலையானதோர் அமைப்பில் வைக்கப் பெருவிடில் சிதறுண்டு போயிருக்கும். ஆனால், அவை யாவும் தவத் திருவாட்டி உருக்குமிணி தேவியாரால் திருவான்மியூரில் நிறுவப்பெற்ற மகா மகோபாத்தியாய டாக்டர் வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் வகையில் பாதுகாத்து வைக்கப் பெற்றிருக்கின்றன. அதன் நிறுவனச் செலவுக்குத் தமிழக வரசும், நடுவணரசும் பொருளுதவி செய்கின்றனவாம். தாம் பேருழைப்போடு அலைந்து திரிந்து தேடித் தொகுத்த சுவடி களும் நூல்களும் பாதுகாப்பாக வைக்கப் பெற்றிருப்பதை டாக்டர் ஐயரவர்களின் ஆருயிர் நுண்ணுடலிற் கண்டு மகிழும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் ஐயரவர்களின் மகனார் திரு. கலியாணசுந்தரமையர் புலவர் திரு. கு. குமாரசாமிபிள்ளைக்கு 10-2-54 இல் எழுதிய கடிதத்திற் குறிப்பிடுவது :

> *"தாங்கள் எழுதியபடி தங்கள் பெயரால் தங்களுடைய ஏட்டுச் சுவடிகளாகிய (1) தொல்காப்பியம். சொல்லதி காரம் - தெய்வச்சிலையாருரை. (2) யாப்பருங்கலக்காரிகை. (3) தமிழ்நெறி விளக்கம் இந்த மூன்றும் இந்த நூல் நிலையத்தின் புத்தக நன்கொடைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளப் பெற்றன வென்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளலானேன்."*

இங்ஙனம் நல்லதோர் அமைப்பிலே போய்ச் சேராமல் எத்தனையோ புலவர்கள் தேடித் தொகுத்த ஏடுகளும் நூல்களும் பிறவும் எங்கெங்கோ சென்றொழிந்து போயுள்ளன.

டாக்டர் ஐயரவர்கட்கு முன்பே தொல்காப்பிய உரைகள், கலித்தொகை உரை, வீரசோழியம் உரை, இலக்கண விளக்கம் உரை, சூளாமணி முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்ட திரு **சி. வை. தாமோதரனார்** தேடித் தொகுத்து வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளும் நூல்களும் எங்கே போய்ச் சேர்ந்தனவோ தெரிய வில்லை.

இனிமேலாவது டாக்டர் ஐயரவர்கள் எழுதிய 'என் சரிதம்' என்ற நூலையும், பிற நூல்களையும் படித்து அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பிடித்து ஆக்கப் பணிகளைச் செய்யுமாறு தமிழ் அறிஞர் பெருமக்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

தஞ்சை சரசுவதிமகால் நூல்நிலையம்

தஞ்சையில் சரபோசி மாமன்னர் பலகலைகளைப் பற்றிய அரிய ஏட்டுச் சுவடிகளையும், நூல்களையும் கலைப் பொருள்களையும் தொகுத்து ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வகையில் செவ்வனே அமைத்துள்ளதைப் போற்றாதாரிலர்.

கழகத்தின் தொண்டு

கழகத்தை 1920 ஆம் ஆண்டு நிறுவிய என் அருமைத் தமையனார் திருவரங்கனாரவர்கள் பழந்தமிழ் நூல்கள், இதழ்கள், புலவர் கடிதங்கள் முதலியவற்றைத் தொகுப்பதில் பெரும் பற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கட்கு இந்த உயரிய கருத்து இறைவனருளால் இயல்பாகத் தோன்றிய தாகவே அறிகின்றேன். ஆனால், யானோ அவர்கள் காட்டிய வழியில் அடியொற்றிச் சென்று நூல்கள், இதழ்கள், புலவர் வரலாறுகள், கடிதங்கள் முதலியவற்றைத் தேடித் தொகுப்பதிலும் பேணிக் காப்பதிலும் கருத்துச் செலுத்தி வருகின்றேன். அத்தகைய எண்ணம் எனக்கு இயல்பாகத் தோன்றிற்றென்று யான் பெருமைப்படுதற்கில்லை.

என் தமையனாரவர்கள் ஏட்டுச் சுவடிகளைத் தொகுப்பதில் மிகுந்த அக்கறை எடுத்ததாக இல்லை? எனினும், இயல்பாகக் கிடைக்கப் பெற்ற ஒரு சில சுவடிகள் நெல்லைக் கழக நிலையத்திலே ஒரு மரப் பேழையில் வைக்கப் பெற்றிருந்தன. அவர்கள் உடல் நலமின்றி ஒரு சில ஆண்டுகள் சோர்வுற்றிருந்தபோது பேழையைத் திறந்து சுவடிகளைப் பார்க்காமலே இருந்து விட்டனர். அவர்கள் 1944 இல் இறையடி சேர்ந்த பின் சில ஆண்டுகள் வரை அந்தப் பேழையைத் திறந்து பார்ப்பதற்கில்லாமற் போய்விட்டது. பின்னர் சிவஞான முனிவர் நூல் நிலையத்துக்குப் புலவராகவும் நூலகராகவும் புலவர் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் அமர்த்தப் பெற்றார்கள். அவர்கள் பேழையைத் திறந்து பார்த்தபோது ஏடுகளெல்லாம் சிதைவுற்றுப் பயன்படாத நிலையில் இருக்கக் கண்டு பெரிதும் வருந்தலானோம். ஆனால், அவை யாவும் அச்சிடப்பெற்ற சுவடிகள் என்பது பதிவேட்டினால் அறியலாயிற்று.

என் தமையனாரவர்கள் கழகத்தை நிறுவுதற்கு முன் கொழும்பில் வேலை பார்த்த காலமுதல் பத்தாண்டுக் காலமாகத் தமிழ் நூல்களைத் தொகுப்பதில் பேரீடுபாடு கொண்டு இரண்

டாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைத் தொகுத்து வைத்திருந் தார்கள். கொழும்பிலிருந்து பாளையங்கோட்டையில் எங்கள் வீட்டுக்கு வந்த காலத்தில் பணப்பேற் றஞ்சலில் புத்தகக் கட்டுக்கள் வந்த வண்ணமிருக்கும். வட்டிக்குப் பணம் வாங்கிப் புத்தகக் கட்டுக்களைப் பெறுவார்கள். வீட்டுச் செலவுக்கே இடர்ப்படும்போது கடன் பெற்றுப் புத்தகங்களை வரவழைக் கின்றீர்களே என்று ஒருமுறை யான் கேட்டேன். 'தம்பி, உனக்கு அதன் அருமை பின்னாலே தெரியவரும்' என்று கூறினார்கள். அவர்கள் அப்படி அந்தக் காலத்திலே தொகுக்காதிருந்திருப் பின் சில அரிய நூல்கள் கிடைக்காமல் போயிருக்கும். தொகுத்த நூல்கள் பின்னர்க் கழகம் ஏற்பட்டுப் பதிப்பிடும் நூல்கட்கு எத்துணை நலம் புரிகின்றன என்பதை இப்போது யான் நன்கு உணர்கின்றேன்.

கழகந் தொடங்கியபின் என் தமையனார் கழக நூல் நிலையத்துக்கே அரிய நூல்களை, பழைய இதழ்களைத் தேடித் தொகுத்து வரலானார்கள். சென்னைக்கு வந்தபோதெல்லாம் நாடோறும் மூரங்காடிக்குச் சென்று பழைய நூல்களை வாங்கி வந்து இரவெல்லாம் விழித்திருந்து புரட்டிப் படித்துக் கொண் டிருப்பார்கள். அவர்கள் இறையடி சேர்ந்தபின் அவர்கள் தொகுத்து வைத்திருந்த நூல்களும் கழகத்துக்கே அவர் தம் மக்களால் விற்கப்பெற்றன.

'கம்பராமாயண சாரம்' என்ற தலைப்பில் கம்பராமாயணம் ஏழுகாண்டங்களையும் 'செந்தமிழ்' என்ற திங்களிதழில் முது பெரும் புலவர் வெள்ளக்கால் வெ. ப. சுப்பிரமணிய முதலியா ரவர்கள் உரையுடன் வெளியிட்டு வந்தார்கள். அவற்றைத் தனித் தனிக் காண்டங்களாக நூல் வடிவில் வெளியிடுவதற்கு என் தமையனாரவர்கள் திருப்பனந்தாள் மடத்திலிருந்து நன்கொடை பெற்று உதவி புரிந்தனர். அப்போது திருவாளர், முதலியாரவர்கள் என் தமையனாரிடம் தம்மிடமிருந்த உடற் கூற்றுநூல் (Anatomy), அறுவை மருத்துவநூல் (Surgery), வைத்திய கைவாகடம் (Hooper's Vademecum) என்ற மூன்று அரிய நூல்களைக் கொடுத்துப் பேணிக் காத்து வைக்குமாறு கூறினர். என் தமையனார் பிரிவுக்குப் பின் என்னிடம் அந்த மூன்று நூல்களைக் குறிப்பிட்டு அவை தங்கள் தமையனார் வீட்டில் இருக்கின்றனவா அல்லது கழகத்திலே இருக்கின் றனவா என்று கேட்டார்கள். அவை மூன்றும் கழகத்திலுள்ள கோத்தரேஜ் நிலைப் பேழையில் மற்ற அரிய நூல்களுடன் இருக் கின்றன என்று யான் கூறியதைக் கேட்டுப் பெருமகிழ் வுற்றனர்.

1958ஆம் ஆண்டில் மறைமலையடிகள் நூல்நிலையம் ஏற்படுவதற்கு முன் அச்சிடப் பெற்ற பழந்தமிழ் நூல்களைத் தேடிப் பெறுவதில் யான் மிகுந்த அக்கறை கொண்டேன். மூரங்காடிக்கு இடையிடையே சென்று எங்குங் கிடைக்கப்பெருத அரிய பல நூல்களை வாங்கி வந்ததுண்டு. 1779 இல் முதன் முதல் தவத்திரு பெப்ரிசியசு தொகுத்து அச்சிட்ட தமிழ் தமிழ் ஆங்கில அகரவரிசை நூல் கிடைத்தது.

தமிழ்ப் பெரும்புலவர் தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் திருமகனுர் திரு. தி. க. இராசேசுவரன் அவர்கள் யாண்டுங் கிடைக்கப் பெருத 300 க்கு மேற்பட்ட அரிய பல தமிழ் நூல் களைத் தொகுத்து வைத்திருந்தார்கள். தமக்குப் பின் அந்த நூல்களைத் தம் பிள்ளைகள் பேணமாட்டார்கள் என்று சொல்லி எனக்கே யான் தீர்மானித்த விலைக்கே விற்றுவிட்டனர். அவை மறைமலையடிகள் நூல் நிலையத்திலே ஆராய்ச்சி யாளர்க்குப் பயன்பட்டு வருகின்றன. பின்னரும் தமக்குக் கிடைக்கப் பெறும் அரிய நூல்களைக் கொண்டுவந்து தருகின் றனர். அவர்கள் தாராவிடில் சில நூல்கள் வேறு வழியில் கிடைக்கப் பெறும் என்று சொல்வதற்கில்லை.

மறைமலையடிகள் 15-9-1950 இல் இறையடி சேர்வதற்கு முன் எழுதிவைத்த விருப்ப ஆவணத் (Will) தின்படி அவர்கள் தொகுத்து வைத்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் மறைமலையடிகள் நூல் நிலையத்திலே ஆராய்ச்சியாளர்க்குப் பயன்தந்து வருகின்றன. அடிகள் விருப்ப ஆவணம் எழுதாமற் போயிருப்பினும் கழக ஆட்சியாளர் வரிந்துகட்டி ஆவணத்தின் மீது நடைபெற்ற வழக்கினை நடத்தாமற் போயிருப்பினும் அடிகளார் நூல்களும் பிறவும் சிதறுண்டு போயிருக்கும் என்பது தெளிவு.

உலகஞ் சுற்றிய பெருமகனுர் திரு ஏ. கே. செட்டியார், திருச்சி பொ. மாணிக்க வாசகம் பிள்ளை, திரு. சோமலெ, திரு. டி. கே. சேதுராமன், திரு. சி. சு. செல்லப்பா முதலியோர் அரிய நூல்களும் இதழ்களும் தந்துள்ளனர்.

என் தமையனுர் தேடித் தொகுத்த பழந்தமிழ் இதழ்களும் யான் தொகுத்துள்ள இதழ்களும் நூல் நிலையத்திலே காட்சியாக வைக்கப் பெற்றுள்ளன.

என் தமையனுரவர்கள் புலவர் சிலரிடமிருந்த கடிதங்களை யும் தமக்கு வரப்பெற்ற கடிதங்களையும் பேணிக் காத்து

வைத்திருந்தனர். அதேபோல் யானும் புலவர் சிலரிடமிருந்த கடிதங்களையும் எனக்கு வந்த கடிதங்களையும் தொகுத்து வைத்திருக்கின்றேன். மறைமலையடிகள் எழுதிய கடிதங்களில் அறுநூறுக்கு மேல் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

புலவர் படங்களைத் தொகுப்பதில் என் தமையனாரவர்கள் ஓரளவு அக்கறை காட்டி வந்தனர். யானோ புலவர் படங்களைத் தொகுப்பது மிகவும் இன்றியமையாத வேலையெனக் கருதி ஏறக் குறைய 400 க்கு மேற்பட்ட புலவர் படங்களைத் தொகுத்து வைத்திருக்கிறேன். தொகுத்த முறையினைப் 'படந் தொகுப் பதில் பட்டறிவு' என்ற தலைப்பிலுள்ள கட்டுரைகளால் அறியலாம்.

இப்போது தமிழ் நாட்டிலும், தமிழர் வாழும் பிற இடங் களிலும் வெளியிடப் பெறும் மலர்களை (Souvenirs)த் தொகுத்து வருகின்றேன். சில மலர்களில் பயனுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் காணப் பெறுகின்றன. எனவே, அவற்றைத் தொகுத்து வைப்பின் ஆராய்ச்சியாளர்கட்கு அவை பெரிதும் பயன்படும் என்று கருதியே தொகுக்கப் பெறுகின்றன. பெரும் பாலும் அறிஞர்கள்கூட நூல்களைப் போல் மலர்களைப் பேணிக் காப்பதில்லை. எனவே, வெளிவந்த மலர்களை யெல்லாம் மறைமலையடிகள் நூல்நிலையத்திலே தொகுத்து வைத்தல் வேண்டு மென்னுங் கருத்து எழலாயிற்று.

கழகம் ஒரு பதிப்பகமாக மட்டும் இல்லாமல் பதிவுசெய்யப் பட்ட மூன்று நூல் நிலையங்களை நடத்துவதால் தொகுக்கப் பெற்றுள்ள நூல்கள், இதழ்கள், மலர்கள், புலவர் கடிதங்கள், வரலாறுகள், படங்கள் முதலியன பேணிக் காத்து வைக்கப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் பொது மக்கட்குத் தமிழின் பழமையினையும், சிறப்பினையும், தமிழரின் பண்பு நலங் களையும் உணர்த்தும் வகையில் கழகப் பெருவிழாக்களிலே காட்சியாக அமைக்கப் பெறுகின்றன.

என் மருகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி தமிழில் எம். ஏ. பட்டமும் நூலக நுண்கலைப் பட்டமும் பெற்று மறைமலையடிகள் நூல்நிலையத்தின் நூலகராக இருக்கின்றார். அவர் படப்படிப்பிலும் திறமையாளர். அவர் பொறுப்பில் மறைமலையடிகள் நூல்நிலையத்திலுள்ள நூல்கள், படங்கள் முதலிய யாவும் பேணிக் காக்கப் பெறுகின்றன. கழகம் வெறும் பதிப்பகமாக மட்டும் இருக்குமேயானால் தேடித்

தொகுக்கப் பெறுபவை பேணிக் காக்கப் பெருமல் ஒழிந்து போதற்கு இடமேற்படும்.

சிலர் தமக்கு வரும் மலர்களை எடைபோட்டுப் பழைய தாள் விலைக்கு விற்றுவிடுகின்றனர். சிலரிடம் தாள் தாளாகப் பிரிந்து கிடக்கும் பழைய நூல்கள் கட்டடஞ் செய்து பேணு தற்கு வாய்ப்பில்லாமல் ஒழிக்கப் பெறுவதைக் கண்டு வருகின்றேன். பழைய கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் சிதைந்த நிலையில் இருக்கும் பழைய நூல்களும் இதழ்களும் ஒழிக்கப் பெற்றுள்ள செய்தியறிவேன். டாக்டர் போப் துரை மகனர் தாம் மொழிபெயர்ப்பதற்குக் குறிப்பெழுதி வைத்திருந்த திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய தமிழ் மூலப்படிகள் மூன்றும் மேலுறையும் முகப்புமில்லாமல் சிதைந்த நிலையில் ஒழிப்பதற்கு எடுத்து வைக்கப் பெற்றிருந்தபோது யான் சென்று கேட்டமையால் கிடைக்கப் பெற்றனவாகும்.

இங்ஙனமெல்லாம் போக்கிவிடாமல் பழைய நூல்கள், இதழ்கள், மலர்கள் முதலியவற்றை மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு அனுப்பிவைத்தால் அவை நன்றியறிதலுடன் பெற்றுப் போற்றிப் பாதுகாக்கப்பெறும்.

நூல்களைக் கட்டடஞ் செய்வதற்கெனத் தொழிற்கூடமும், நூல்களை அச்சிடுவதற்கென அச்சுக்கூடமும் கழகத்திலே இருக்கின்றமையால் எந்த நிலையில் நூல்களோ, மலர்களோ, இதழ்களோ கிடைக்கப் பெறினும் செம்மை செய்து அவை போற்றப் பெறுகின்றன. திரும்ப அச்சிட வேண்டிய பயனுள்ள பழைய நூல்களும் அச்சிட்டு வெளியிடப் பெறுகின்றன.

பழமொழிகள், மரபுத் தொடர் மொழிகள், நாட்டுப் பாடல்கள், தனிப்பாடல்கள், பழங்கதைகள், மருத்துவக் கைமுறைகள் முதலியவற்றைத் தேடித் தொகுப்பதில் ஒரு சிலர் முன்னமே அக்கறை காட்டியதனுற்ருன் அவையெல்லாம் சில நூல்களாக வெளிவந்திருக்கின்றன. அந்நூல்களில் இடம் பெருத எத்தனையோ பழமொழிகளும் பிறவும் தேடினல் கிடைக் கப்பெறும் என்ற நம்பிக்கை பெரிது முடையேன். எனவே, அவ்வகையிலும் அறிஞர்கள் கருத்துச் செலுத்துதல் வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

—வ. சுப்பையா.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

(ஞா. தேவநேயன்)

சுல்[5] (சிவத்தற் கருத்து வேர்ச்சொல்)

சுல்—சுல்லி=1. அடுப்பு. 2. மடைப்பள்ளி. சுல்—சுள். சுள்ளல்=சுடுதல், காய்தல்.

சுல்—சுல்லம்=செம்பு. (மலை.). சுல்லம்—வ. சுல்ல.

சுல்—சுல்வு—சுல்வம்=செம்பு. "சுல்வத்தா லமைத்த நெடுங் களத்தின்" (சேதுபு. தனுக்கோ. 9). சுல்வம்—வ. சுல்வ.

நெருப்பின் நிறம் சிவப்பாதலால், நெருப்புக் கருத்தினின்று சிவத்தற் கருத்துத் தோன்றிற்று.

ஒ. நோ: எரி=நெருப்பு, சிவப்பு. எரிமலர்=1. சிவந்த முருக்கமலர். 2. செந்தாமரை.

செம்பு செந்நிறமாழை (உலோகம்). அதனல் அப்பெயர் பெற்றது.

சுல்—செல்—சேல்=செந்நிறக் கெண்டை மீன்.

சேல்விழி=சேல் மீன் போலும் செவ்வரி பரந்த பெண்ணின் கண். "சேலுண்ட வொண்கணரிற் றிரிகின்ற செங்காலன்னம்" (கம்பரா. நாட்டுப். 13).

செல்—செள்—செட்டு—செட்டி = 1. சிவந்த அடியையுடைய வெட்சிச் செடி. "செங்கால் வெட்சி" (திருமுரு. 21) 2. சேயோன் (செந்நிற முருகன்).

செட்டு—செச்சு—செச்சை=1. சிவப்பு. "செச்சை வாய் திறந்து" (திருவிளை. வலை. 24). 2. வெட்சி. "செச்சைக் கண்ணியன்" (திருமுரு. 208). 3. செந்துளசி. (மலை.).

செச்சு—செஞ்சு=செம்மை, செவ்வை, நிறைவு. "செஞ் சுறு செஞ்சுடர்" (திருமந். 1713).

செஞ்சு—செஞ்சம்=1. நேர்மை. 2. நிறைவு, முழுமை. "செஞ்சமுற வேறல் செயமென்று" (குற்ரு, தல. திருமால்.

114). இயல்பாக எல்லாரையுஞ் சுட வேண்டிய நெருப்பானது, வாய்மை, குற்றமின்மை, கற்பு, தெய்வநம்பிக்கை முதலிய பண்புகளை மெய்ப்பிக்கும் தெய்வச் சான்ருக நின்று சுடா திருப்ப தால், தீயின் நிறப்பண்பாகிய செம்மைக் கருத்தினின்று, தூய்மை அல்லது நேர்மைக் கருத்தும், நேர்மைக் கருத்தி னின்று நிறைவுக் கருத்தும், கிளைத்தன.

செள்—செய்—செய்ம்மை = செம்மை (சிவப்பு).

செய்ய = 1. சிவந்த. ''செய்ய தாமரைகளெல்லாம்'' (கம்பரா. நீர்விளை. 3). 2. செப்பமான, நேர்மையான. ''செய்ய சிந்தைப் பேரருளாளர்'' (கம்பரா. விபீடண. 128).

செய்யவள் = சிவந்த திருமகள். ''செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்'' (குறள். 167).

செய்யவன் = 1. சிவந்தவன். 2. சிவன். ''செய்ய வனே சிவனே'' (திருவாச. 6 : 7). 3. செவ்வாய்க்கோள். (விதான. குணுகுண. 12). 4. கதிரவன் (W.).

செய்யான் = செம்பாம்பு. (சித்தர். சிந்து).

செய்யாள் = 1. செங்கோலத் திருமகள். ''செய்யாட் கிழைத்த திலகம் போல்'' (பரிபா. 22 : 4.). 2. மூதேவியின் தங்கை போன்ற தாயின் தங்கை (சிறிய தாய்)—தஞ்சை வழக்கு.

செய்யான் = 1. சிவன். ''செய்யானை வெண்ணீறணிந் தானை'' (திருவாச. 8 : 13). 2. செம்பூரான்.

செய்யோள் = 1. செந்நிற முள்ளவள். ''எய்யா விளஞ்சூற் செய்யோள்'' (பொருந. 6). 2. திருமகள். ''செய்யோள் சேர்ந்தநின் மாசிலகலம்'' (பரிபா. 2 : 31).

செய்யோன் = 1. செந்நிறமுள்ளவன். ''செய்யோனக ளங்கன்'' (பெருந் தொ. 817). 2. செவ்வாய். ''மீனத்து மந்தன் செய்யோன் மதியெழ'' (விதான. கர்ப்பா. 10).

செய்—செயல்—செயலை = சிவந்த அடியையுடைய அசோக மரம். ''செயலைத் தண்டளிர்'' (திருமுரு. 207) என்னுந் தொடருக்கு, ''சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர்'' என்று நச்சினர்க்கினியர் பொருள் வரைந்திருத்தல் காண்க. ''சேந்த செயலை'' (மலைபடு. 160) = சிவந்த அசோக மரம்.

செய்தல்=1. சிவத்தல். 2. கை சிவக்குமாறு வேலை செய்தல். 3. ஏதேனுமொரு வினை செய்தல். 4. செய்யுள் இயற்றுதல். "வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன். 268). 6. நூலியற்றுதல். "பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்" (நன். 49). 7. உண்டாக்குதல். "செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காமம்" (கலித். 140). 8. ஈட்டுதல். "செய்க பொருளை" (குறள். 759). 9. ஒத்தல். "வேனிரை செய்த கண்ணி" (சீவக. 2490). தமிழருள் தொன்று தொட்டு வெள்ளாளர், காராளர் என இரு வண்ணத்தார் இருந்து வந்திருக்கின்றனர். வெள்ளாளர் என்றது பொன்னிறத்தாரை. காராளர் என்றது குரால் (கபில) நிறத்தாரையும் கரியரையும். கரியரும் புதுநிறத்தார் முதல் கன்னங்கரியர் வரை பல திறத்தர். பொன்னரைச் சிவப்பர் என்பதுமுண்டு. மெய்வருந்தி யுழைப்பின், வெள்ளாளர் அகங்கை சிவந்தும் காராளர் அகங்கை கருத்தும் போகும். அதனால், வினைசெய்தலைக் குறிக்கச் செய்தல் கருத்தல் என்னும் இரு சொற்கள் தோன்றின. கருத்தல் வினைவழக் கிறந்து போயிற்று. இன்று அது கருவி, கருமம், கரணம் என்னும் பெயர்ச் சொற்களில் முதனிலையாக மட்டும் நிற்கின்றது. கரு என்னும் தென்சொல்லே வடமொழியிற் 'க்ரு' என்று திரியும்.

செய்ம்மை—செம்மை—செம்.

ஒ. நோ: வெள்—வெய்—வெய்ம்மை—வெம்மை—வெம்.

செம்மை=1. சிவப்பு. (திவா.). 2. செவ்வை. (திவா.). 3. நேர்மை. "செம்மையி னிகந்தொரீஇ" (கலித். 14). 4. மனக்கோட்டமின்மை. "செம்மையுஞ் செப்பும்" (தொல். பொருளியல், 15). 5. கேது. (சூடா.). 6. துப்புரவு. 7. அழகு. 8. பெருமை. "செம்மை சான்ற காவிதி மாக்களும்" (மதுரைக். 499).

செம்=1. சிவந்த. எ-டு: செந்நீர். 2. நேர்மையான. எ-டு: செங்கோலாட்சி. 3. நடுநிலையான. "செம் மனத்தான்" (நள. 46). 4. இலக்கணம் பிறழாத. எ-டு: செந்தமிழ். 5. முதிர்ந்த. எ-டு: செங்காய். 6. சொல் லழகில்லாத. எ-டு: செந்தொடை. 7. இயல்பான. "செம்மகள் (கல்லா. 5:31). 8. தகுந்த, ஏற்ற. எ-டு: செந்துறை. 9. சமமான. எ-டு: செம்பாகம். 10. ஒரே யொழுங்கான. எ-டு: செந்தூக்கு. 11. கோட்டமில்லாத. எ-டு: செங்குத்து. 12. எண்ணிடைச்சொல் பெறாத. எ-டு: செவ்வெண்.

பருவியற் கருத்தினின்று நுண்ணியற் கருத்துத் தோன்றுவதுபோன்றே, நுண்ணியற் கருத்தினின்று பருவியற் கருத்துந் தோன்றும். குணத்தின் அல்லது நடத்தையின் நேர்மை நுண்ணியல்; கோலின் அல்லது உடம்பின் நேர்மை பருவியல்.

செம்+படு=செம்படு—செப்படு. செப்பட=செவ்விதாக. "செப்பட முன்கை யாப்ப" (சீவக. 2665).

செம் + ஆ = செம்மா. செம்மாதல் = செம்மையாதல். "என் கண்ணன் கள்வ மெனக்குச் செம்மாய் நிற்கும்." (திவ். திருவாய். 9 : 6 : 6).

செம்மன்=காவி நிறமுள்ள திருக்கை மீன்வகை.

செம்மல்=1. வாடிச் சிவந்த பழம்பூ. "உதிர்ந்த...... செம்மல் மணங்கமழ" (சிலப். 7, பாடல், 39). 2. பெருமை, தலைமை. "அருந்தொழில் முடித்த செம்மற் காலை" (தொல். கற்பியல், 5). 3. வலிமை. (பிங்.). 4. தருக்கு. "செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்" (குறள். 880). 5. பெருமையிற் சிறந்தோன் தலைவன். (திவா.). 6. பெருமையுள்ள மகன். "பருதிச் செல்வன் செம்மலுக்கு" (கம்பரா. அனும. 18). 7. இறைவன். (திவா.). 8. சிவன். (சூடா.). ம. செம்மு.

தலைவன் அல்லது அரசன் செம்மல் எனப்பட்டது, நேர்மையான ஆட்சியால்; சிவன் செம்மல் எனப்பட்டது செந்திறத்தால்.

செம்மாத்தல்=1. வீறுபெறுதல். "அண்ணல் செம்மாந் திருந்தானே" (சீவக. 2358). 2. இறுமாத்தல். "மிகப் பட்டுச் செம்மாக்குங் கீழ்." (குறள். 1074).

செம்—செம்பு=1. தாம்பரம். "செம்பிற் செய்நவும்" (சிலப். 14 : 174). 2. செம்பினுற் செய்த குடிநீர்க்கலம். 3. ஒரு முகத்தலளவு.

ம. செம்பு, க. செம்பு, கெம்பு.

செம்பு—செம்பை=ஒருவகைப் பூச்செடி.

செம்பு—செப்பு=1. செம்பு. 2. செம்பினுற் செய்த நீர்க்கலம். "சேமச் செப்பிற் பெறீஇயரோ" (குறுந். 277). 3. சிமிழ். "செப்பின் புணர்ச்சிபோற் கூடினும்" (குறள். 887). ம. செப்பு.

செப்பு—செப்பம் = 1. செம்மை. "செப்பமும் நாணு மொருங்கு" (குறள். 951). 2. நடுநிலை. "செப்பம் உடையவ ளுக்கம்" (குறள். 112). 3. ஒக்கிடுகை. குடையைச் செப்பஞ் செய்ய வேண்டும். (உ. வ.). 4. செவ்வையான பாதை. "சேந்த செயலைச் செப்பம் போகி" (மலைபடு. 160). 5. செவ்வையான தெரு. (பிங்.).

செப்பு – செப்பல் = 1. செந்நிறம். "பொழுது செப்ப லோடிவரும் பொழுது" (யாழ்ப்.). 2. அருணன் எழும் நேரம்.

செப்பம்—செப்பன். செப்பனிடுதல் = செவ்வை செய்தல், ஒக்கிடுதல், பழுது பார்த்தல், புதுப்பித்தல்.

செப்பல் – செப்பலி = செந்நிறமுள்ள கடல்மீன் வகை.

செம்—செவ். செஞ்செவ்வே—செஞ்செவே = 1. நேராக "செஞ்செவே கமலக் கையாற் றீண்டலும்" (கம்பரா. பூக்கொய் 7). 2. எளிதாக. "செஞ்செவே படர்வரென் படைஞர்." (கம்பரா. வருணனை. 13). 3. முழுதும். "செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே" (திருவாச. 28 : 6).

ம. செஞ்செம்மே.

செஞ்செவே — செஞ்ச = 1. நேராக. "செஞ்ச நிற் போரைத் தெரிசிக்க" (திருமந். 2079). 2. முழுதும்.

செவ் —செவ்வல் = 1. செந்நிறம். "செவ்வலங் குன்றம்" (களவழி. 10). 2. செம்மண் நிலம்.

செவ்வன் = செவ்வையாக. "செவ்வ னிறைகாக்கு மிவ் வுலகில்" (பு. வெ. 10, முல்லைப். 9).

செவ்வன் — செவ்வனம் = செவ்வையாக. "செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலள்" (மணி. 3 : 81).

செவ்—செவ்வி = 1. தகுந்த சமயம். "கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி" (குறள். 130). 2. காட்சி. "செவ்வியுங் கொடாஅன் இவ்வியல் புரிந்தனன்" (பெருங். 2 : 9 : 198). 3. பேரரும்பு. (பிங்.). 4. விளைச்சற் பருவம். "முதிர்ந்த செவ்வித் தினையினை" (கந்தபு. வள்ளி. 158). 5. புதுமை. "காயா மலருஞ் செவ்விப்பூப் போல" (பு. வெ. 9 : 4, உரை). 6. அழகு. "வண்டுறை கமலச் செவ்வி

வாண்முகம் பொலிய'' (கம்பரா. சூர்ப்ப. 2). 7. சுவை. ''பாற் சோற்றின் செவ்வி கொளறேற்ரு'' (நாலடி. 322) 8. மணம். ''நாவிய செவ்விநாற'' (கம்பரா. கார்கால. 35). 9. தன்மை. 10. செம்மை. ''செவ்வியிற் ருெடர்ந்த வல்ல செப்பலை'' (கம்பரா. இரா. வதை. 210).

செவ்வு=1. செம்மை. 2. நேர்மை. ''ஆருயிர் செவ்விராது'' (கம்பரா. காட்சி. 29). 3. நேர் (திசை). இந்தச் செவ்வுக்குப் போனற் கல்லூரியைக் காணலாம். (நாஞ்).

க., ம. செவ்வு.

செவ்வே=1. நன்ருக. .'செவ்வே நெஞ்சால் நினைப் பரிதால்'' (திருவிருத். 98). 2. நேரே. ''செவ்வே பாரிற் செல்கின்ற'' (கம்பரா. முதற் போர். 216). ம. செவ்வே.

செவ்—செவ்வை=1. செப்பம். அது செவ்வையான பாதை. (உ. வ.). 2. நேர்மை: ''தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி''. 3. ஒழுங்கு. எல்லாம் செவ்வையா யிருக்கின்றன. (உ. வ.).

செவல்=1. செம்மண் நிலம்.

செவேர் எனல்=செந்நிறமாயிருத்தல்.

செவ்—சிவ். சிவ்வெனல்=சிவந்திருத்தல்.

சிவ்—சிவ. சிவத்தல்=1. செந்நிறமாதல். ''காமர் நெடுங்கண் கைம்மீச் சிவப்ப'' (பெருங். இலாவாண. 14 : 63). 2. சினத்தல். ''சிவந்தனை காண்பாய்நீ தீதின்மை'' (கலித். 91).

சிவத்தை=1. சிவப்பு. 2. பொன்னிறப் பெண். 3. செந்நிறக் காளை.

சிவப்பு=1. செந்நிறம். 2. சிவப்புக்கல். 3. சினம். ''கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.'' (தொல். உரி. 74).

ம. சுவப்பு.

சிவப்பன்=பொன்னிறத்தான். ''பேர் கறுப்பன் திறஞ் சிவப்பன்.'' (தனிப்பாட்டல்). சிவப்பு—சிகப்பு.

சிவப்பி=1. பொன்னிறத்தாள். 2. செந்தெங்கு.

சிவ—சிவம்=1. செம்பொருள் (சிவன்). 2. சிவன் தன்மை. "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி" (திருவாச. 51 : 1). 3. வீடு, பேரின்பம்.

சிவம்—சிவன்=சிவநெறியாரால் செந்நிறத்தான் எனக் கருதப்படும் இறைவன் அல்லது கடவுள்.

சிவன்—சிவை=சிவன் தேவியாக உருவகிக்கப்பட்ட திருவருள்.

சிவ—சிவல்=செம்மண் நிலம். 2. பெரும்பாலும் சிவற்காடான முல்லை நிலத்துக் கதுவாலி என்னும் பறவை.

சிவல் — சிவலை = செந்நிறக்காளை. "நெற்றிச் சிவலை" (கலித். 104).

சிவீர் எனல்=சிவந்திருத்தல்.

சிவீர்—சிவேர். சிவேர் எனல்=சிவந்திருத்தல்.

செவ்—செவு—செகு—செக்கு—செக்கம்.

செக்கம்=1. சிவப்பு. 2. சினம். "செக்கஞ் செகவென் றவள்பா லுயிர்செக வுண்ட பெருமான்" (திவ். திருவாய். 1 : 9 : 5).

செக்கச் செவேர் எனல்=மிகச் சிவந்திருத்தல்.

செக்கச் சிவத்தல்=மிகச் சிவத்தல். "விழியிணை செக்கச் சிவந்து" (திருப்பு. 126).

செக்கம்—செக்கல்=1. செவ்வந்தி. 2. அந்திமாலை.

செக்கல்—செக்கர்=1. சிவப்பு. "சுடுதீ விளக்கஞ் செல் சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் ரோன்ற" (புறம். 16). 2. செவ்வானம். "செக்கர்கொள் பொழுதினன்" (கலித். 126).

செகு — செகில் = சிவப்பு. "செகிலேற்றின் சுடருக் குளைந்து" (திருவிருத். 69).

செகில்—செகிள்=மீனின் சிவந்த மூச்சுறுப்பு (gills).

செகிள்—செகிடு=அலகடி, கன்னம். செகிட்டைக் கட்டி யறைந்தான். (உ. வ.).

செகிள்—செவிள்—செவிடு=செவியொட்டிய கன்னம்.

செய்—சேய்=1. சிவப்பு. "சேயுற்ற கார்நீர் வரவு." (பரிபா. 11 : 114). 2. செவ்வாய். (பிங்). 3. செந்நிற முருகன்.

"பவழத் தன்ன மேனித் திகழொளிச்
குன்றி யேய்க்கு முடுக்கை......
....
சேவலங் கொடியோன்" (குறுந். கட. வாழ்)

என்றது காண்க.

4. முருகனை யொத்த மறவன். "பாரதப்போர் செற்ருனுங் கண்டாயிச் சேய்" (நள. 137).

சேய்—சேயன் = செந்நிறத்தான். "வண்ணமு மாய னவனிவன் சேயன்" (தொல். உவ. 32, உரை).

சேயன்—சேயான் =செந்நிறத்தான்.

சேயவன்=1. செவ்வாய். (திவா.). 2. செந்நிற முருகன். "ஆறுமாமுகச் சேயவன்" (கந்தபு. தெய்வயா. 58).

சேயோன்=1. முருகன். "சேயோன் மேய மைவரை யுலகமும்" (தொல். அகத். 5). 2. சிவன்.

சேயது — சேய்து — சேது = 1. சிவப்பு. (சூடா.). 2. சிவந்தது. சேது—கேது=சிவந்த சாயைக்கோள், the descending node (திவா.).

ஒ. நோ : செம்பு—கெம்பு (க.). சீர்த்தி—கீர்த்தி (வ.).

சேது—சேத்து=சிவப்பு. (திவா.). "சேத்தகில் புழுகு சந்தம்" (பாரத. பதினேன். 219).

சேது + ஆ=சேதா=செந்நிற ஆன். "சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா." (நற். 359).

சேது + ஆம்பல் = சேதாம்பல்=செவ்வாம்பல்.

"சேதாம்பற் போதனைய செங்கனி வாய்" (கம்பரா. நகர் நீங். 101).

சேய்—சே. சேத்தல்=சிவப்பாதல். "அவன் வேலிற் சேந்து" (கலித். 57). 2. சினத்தல். "நித்தில மேந்திச் சேந்தபோல்" (சீவக. 329).

சே = 1. சிவப்பு. "சேக்கொள் கண்ணே" (கல்லா. 85 : 9). 2. சேங் கொட்டை. (மலை.).

சே—சேப்பு=1. சிவப்பு. ''ஊடலிற் செங்கண் சேப்பூர'' (பரிபா. 7 : 70). 2. சிவப்புக்கல்.

சேத்து—சேந்து=1. சிவப்பு. (பிங்). 2. தீ. (யாழ். அக.). ''சேந்தி னடைந்த வெலாஞ் சீரணிக்க'' (அருட்பா, i, நெஞ்சறிவுறுத்தல், 689). 3. அசோகு. (மலை.).

சேந்து—சேந்தன் = முருகன். ''சூர்தடிந் திட்ட சேந்தன்'' (தேவா. 942 : 6)

சேந்தன்—சேந்து. ஒ. நோ : வேந்தன் — வேந்து.

சேந்து+இல்=சேந்தில்—செந்தில்.

சேந்து+ஊர்=சேந்தூர்—செந்தூர் (திருச்செந்தூர்).

சே — சேவு = செவ்வயிரம், வயிரம். ''செய்த கை சேவேறும், செய்யாத கை நோவேறும்.'' (பழமொழி).

சேவு—சேகு. சேகுவயிரம் = செவ்வயிரம்.

சேகு — சேகை = சிவப்பு. ''அண்டத்துயிர்களெலாம் வந்திறைஞ்சச் சேகையாய் மல்குந் திருத்தாள்'' (கந்தபு. இரணியன்பு. 14).

குறிப்பு : சிவம் என்னும் சொல்லிற்கு, நன்மை என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி ஒரு பொருள் கூறியிருப்பது, வடநூல் வழக்கைத் தழுவியதாகும். சிவன் தென்னவர் தெய்வமாதலால், அப்பொருள் பொருந்தாது. நல்ல அல்லது மங்கல என்னும் பொருளில், உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் அக்கினிக்கும் பொதுவாக வழங்கிய, 'சிவ:' என்னும் அடைமொழி யாகிய வடசொல் வேறு; நெருப்பின் கூறாகக் கொள்ளப்பட்டு அழல் வண்ணன் எனப்பட்ட இறைவன் பெயராகிய சிவன் என்னும் தென்சொல் வேறு.

சிவனியம், மாலியம் ஆகிய இரு தமிழ மதங்களையும் ஆரியப் படுத்தற்பொருட்டு, ஆரியர் வகுத்த முத்திருமேனிக் கூட்டில், முத்தொழில் தலைவனாகிய சிவனுக்கு அமங்கலமான அழிப்புத் தொழிலே ஒதுக்கப்பட்டது பற்றி, சிவனியத் தமிழர்க்குள்ள மனத்தாங்கலைத் தீர்த்தற்கே, சிவன் என்னும் சொற்கு நன்மை செய்பவன் என்று பொருள் கூறி, சிவனுக்குச் சங்கரன் (சம்+கர=சங்கர=நன்மை செய்வன்) என்றொரு பெயரையும் அமைத்தனர் என அறிக.

———

சிலப்பதிகார ஆராய்ச்சி

(2) உருபு செய்த உயிர்க்கொலை

[புலவர் இரா. இளங்குமரன்]

பழிச்செயல் புரியார் பாண்டியர்; பழியொன்று நேரின் உயிர் வாழார். இத்தகைய பாண்டியர் குடியிலே வந்தவன் வெற்றிவேற்செழியன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மதுரையிலே இருந்து அரசு புரிந்தபோது, கொற்கையிலிருந்து தென்பாண்டி நாட்டைக் காத்தவன் இவ் வெற்றிவேற் செழியனே. நெடுஞ்செழியன் மாண்ட நிகழ்ச்சியை அறிந்து இவன் மதுரைக்கு வந்து 'காலைக் கதிர்க் கடவுள்' என்ன அரசு கட்டில் ஏறினான்.

ஆரியப்படை கடந்தான் ஆராயாமல் கோவலனைக் கொன்றதால் பழிக்கு ஆளானான். அப்பழியை அறிந்தபின் "கெடுக என் ஆயுள்" என்று அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்தான். கோப்பெருந்தேவியும் "தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல்" அரசனுடன் மாண்டாள். இந் நிலைமையிலே ஆட்சி ஏற்கின்றான் வெற்றிவேற்செழியன். அவன் பொறுப்பு ஏற்றகாலையில் பாண்டிய நாட்டின் நிலைமை இஃது எனவும், ஆட்சி ஏற்றவன் செயல் இஃது எனவும் சிலம்பு தெரிவிக்கின்றது. அஃது, "அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கியது" என்பது. இஃது உரை பெறு கட்டுரையிலுள்ளது. மங்கல வாழ்த்துக்கு முன்னாகவே இருக்கும் இக்கட்டுரை அடிகள் எழுதியது தானா? இவ்வுரையின் உண்மைதான் என்ன?—இவற்றைக் காண்போம்.

பாண்டியன் பழிகாரன் ஆனதற்குக் காரணமாக இருந்தவன் பொற்கொல்லன் ஒருவன். ஆதலால் அரசுரிமை ஏற்ற வெற்றிவேற்செழியன் அக்கொல்லன் இனத்தவர் ஆயிரவரைக் கொன்று களவேள்வி செய்தான். இது குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போன்றது அல்லவா! பழியைப் போக்கப் பெரும்பழியா புரிவது? செங்கோல் தென்னவர் செயலா இது?

உரைபெறு கட்டுரை அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் ஆகிய இருவருக்கும் முன்னரே இடம்பெற்று விட்டது என்பதை அவர்கள் உரை உண்மையால் தெளியலாம். அவர்கள் கொல்லர் ஆயிரவர் பலியை ஐயுற்று எழுதினர் அல்லர். ஆனால் சிலப்பதிகாரப் புத்துரை ஆசிரியர் நாட்டா ரவர்கட்கு ஐயந் தோன்றியது. பழையதை மறுக்காமலே "மாவினால் ஆயிரம் பொற்கொல்லர் உருச்செய்து பலியிட்டான் போலும்" என்று எழுதினார். மாவினால் இடும்பலி உயிர்ப்பலி யாகுமா? பூப்பலிபோல மாப்பலி ஆகுமே அன்றி உயிர்ப்பலி ஆகாது!

ஒரு பொற்கொல்லன் செய்த தவற்றுக்காக—அவன் இனத்தவர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக—ஏதும் அறியாத ஆயிரவரைக் கொன்ற கொடுமையை "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" எனக்கொண்ட பாண்டிய நாட்டு அரசின் மேல் ஏற்றுதல் இழுக்காகும்.

வெற்றிவேற்செழியன் "அரைசு கெடுத்து அலம் வரும் அல்லற் காலையிலே" கொற்கையிலிருந்து மதுரைக்கு வந்தான் என்று நீர்ப்படைக் காதையிலே பாடினார் அடிகள். அரசினை இழந்து மயங்கும் துன்பமிக்க காலம் பாண்டிய நாட்டுக்கு இருந்ததே அல்லாமல், வெப்பும் குருவும் தொடர்ந்ததாகக் குறிப்பு இல்லை. வெப்பும் குருவும் தொடர்ந்தால்—கண்ணகி யாரின் வஞ்சினத்தால் தொடர்ந்தால்—அதற்கு மன்னனும், அவனைப் பழிவழிச் செலுத்திய ஒரு பொற்கொல்லனுமே காரண மாவர் அன்றி மற்றையோர் யாது செய்வர்?

"நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர" அரண் மனைக்குப் பொற்கொல்லன் சென்று கொண்டிருக்கும்பொழுது கோவலன் அவனைக் கண்டான். "இச்சிலம்பினை விலையிடக் கூடுமோ?" எனக் கேட்டான். "பாண்டிமாதேவிக்குரிய சிலம்பினை நான் கவர்ந்து கொண்டது வெளிப்படுமுன் இவனே கள்வன் எனக் காட்டித்தந்து என்மேல் ஐயம் ஏற்படாதவாறு காப்பேன்" என உறுதி செய்துகொண்டு, காவலனைக் காணுகின்றான். தக்க உரையால் தன் எண்ணத்தையும் முடித்துக் கொள்கின்றான்.

நூற்றுவர் பின் தொடர்ந்து வரினும் எவரிடத்திலும் அவன் தன் கரவு எண்ணத்தைக் கூறினான் அல்லன். அவரும் கேட்டாரல்லர். அது பற்றிய சிந்தனை எதுவும் அற்றவராய் அவரவர் பணிக்கு ஏகினர். காவலனிடம் பொற்கொல்லன்

கரவாகப் பேசியதும், அதன் விளைவால் கோவலன் கொலை செய்யப் பெற்றதும் அவர் அறியார். ஒரு வேளை, உண்மையைத் தெளிவாய் அறிந்திருந்தும், வஞ்ச உள்ளத்தாலோ, அச்ச நடுக்கத்தாலோ தடுத்து உரையாமல் இருந்திருப்பின் அவர்கள்மீது பழி சூட்டவும் கூடும். அதற்கும் வழியில்லை. அன்றிக் கொல்லப்பட்டவர்கள் என்று குறிக்கப்படுபவர்களும் அந்நூற்றுவர் அல்லர். ஆயிரவர்! இது பெரும் பழியல்லவா! காவலன் கடமையா இது?

வெற்றிவேற்செழியன் அரசனையும் அரசியையும் இழந்த துயரத்தால் அறிவிழந்து, வெறிகொண்டு இச்செயலைச் செய்தான் என்றே கொள்வோம். அக் காலையில் அமைச்சர், ஆன்ரூேர், அறிவர் எவரும் இலரா? அவர்களெல்லாரும் தடுக்காமல் வாளா விட்டு விட்டனரா? அன்றி இத்தண்டம் தரவேண்டியது முறையே என்று அவர்கள் உள்ளமும் ஒப்புக் கொண்டுவிட்டதா? அவ்வாருயின் பாண்டியனுக்கு மட்டு மன்று—தமிழகப் பண்பாட்டுக்கே பெருங்களங்கம் ஆகும்.

தனிமகன் ஒருவன் உரையை அறிவு பிறழ்ந்த நேரத்தே ஏற்றுக்கொண்டு, பிறர் அறியாமல் இட்ட கட்டளையால் நிகழ்ந்தது கோவலன் கொலை. அது போல்வதா ஆயிரம் பொற்கொல்லர் கொலை? ஊர் அறியாமல்—ஏன்—நாடே அறியாமல் செய்துவிட இயலுமா? ஆயிரவர்களை எவரும் அறியாமல் ஒன்று சேர்க்கவோ பலியிடவோ கூடுமோ? அவர்களும் உவப்புடன் முன்வந்து தங்களைத் தாங்களே பலியிட ஒப்பினரா? அவர்கள் மனைவி மக்களும் உடந்தையாகி விட்டனரா? எப்படி ஒப்புவது?

மலையமான் மக்களை யானைக்காலின் கீழிட்டுக் கொல்லத் துணிந்த கிள்ளிவளவனைத் தடுத்து நிறுத்தியவர் எவர்? ஒற்று வந்தான் என்று இளந்தத்தன் என்னும் புலவனைக் கொல்ல நின்ற நெடுங்கிள்ளியைத் தெருட்டி நிறுத்தியவர் எவர்? மைந்தரொடு மாறுபட்ட மன்னரை, மனைவியொடு வேறுபட்ட வேந்தரைத் திருத்தி நிலை நிறுத்தியவர் யாவர்? முடிவேந்தர்கள் ஆயினும் முறைகெட்டுச் செல்லுங்கால் இடித்துக்கூறி நன்னெறி காட்டியவர்கள் யாவர்? தமிழ்வளம் கொழித்த தகைசால் புலவர்கள் அல்லரோ? அவர்களுள் எவருமே சங்கம் இருந்து புலவர் கூட்டுண்ட தமிழ் மதுரையிலே இல்லாமல் போய் விட்டனரா? இருந்தும் தடுக்க முன் வந்தாரில்லை என்ருல் பழி! மாபெரும் பழி! தமிழ்த் தாய்க்கே இழிவு!

நூலுள், நீர்ப்படைக் காதையிலே,

''கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றெழிற் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபக லெல்லை உயிர்ப்பலி யூட்டி''

என்றுவரும் வரிகளை உட்கொண்டு உரைபெறுகட்டுரை எழுதப் பெற்றதாம். இந் நீர்ப்படைக்காதை வரிகளை மாடலன் என்னும் மறையோன் செங்குட்டுவனிடம் உரைக்கின்றான். ''மன்னன் இறந்தபின் வளங்கெழு சிறப்பின் தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை'' என்ற செங்குட்டுவன் வினவுக்கு விடையாகவே இதனைக் கூறுகின்றான். இப்பகுதி ஆயிர வரை உயிர்ப் பலி ஊட்டிய நிகழ்ச்சியாயின் சொல்லுபவன் கவலைக்குரல் காட்டியிருக்கக் கூடும். அன்றிக் கேட்பவனும் கவலை பெருக்கி யிருக்கக்கூடும். இரண்டுமே இல்லை!

முன்பு செங்குட்டுவனை மலைநாட்டிலே கண்டு கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் கூறுங்காலையில், பாண்டியன் செய்த தவற்றினையும், அதன்பின் அவன் மாண்டதனையும் கேள்விப் பட்டு ''வருந்தினன்; மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் அல்லது தொழுதகவுஇல்'' என உரைத்துக் கவலை கொண்டவன், இங்கே ஆயிரவர் பலியினைக் கேள்வியுற்று வாளா இருப்பனோ? இருக்கவும் உள்ளம் விடுமோ? ''இது பெரும் பழி'' என்று கொதித்துரைத்திருக்க மாட்டானோ? இவற்றுள் எதுவும் இல்லை. இவ்வாறு சொல்பவனும் கேட்பவனும் சிறிதும் கவலையற்றவர்களாய்க் காணப்பெறுவ தால் ஆயிரவரை உயிர்ப்பலியிட்ட நிகழ்ச்சி அங்குக் கூறப் பெற்றது இல்லையாம். அவ்வாறு பலியிட வேண்டியதும் இல்லையாம்.

கண்ணகியார் கணவனை இழந்த கவலையிலே,

''பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்க''

என்று தீக்கு ஆணையிடுகின்றார். அவர் ஆணைப்படியே தீத்திறத்தோர் அனைவரும் ஒழிந்திருக்க வேண்டுமே! அதனை விடுத்து ஆயிரவர் பொற்கொல்லரைப் பலியிட்டது தெய்வமும் ஏற்கத்தகாத செயல்தானே! கண்ணகியாரே தீயவர்களுக்குத் தெய்வத்தின் பெயரால் தண்டனை தந்தார். தீயவர் அழிந்து

போயிருக்க வேண்டும். எஞ்சியிருந்தவர் எவரும் தீயரல்லர்! நல்லோரே! நல்லோர் ஆயிரவரைக் கொன்றது அறநெறிக்கு ஏற்குமா? அதனை ஏற்றுக் கொண்டது எனின் கண்ணகியார் கூறியதுபோல் மதுரை மாநகரில்,

"சான்றோரும் உண்டு கொல்?"

"தெய்வமும் உண்டு கொல்?"

கோவல கண்ணகியாரைக் கண்டு புன்சொல் கூறிய தூர்த்தனும் பரத்தையும் கவுந்தியடிகள் சாபத்தால் முள்ளுடைக் காட்டில் முதுநரியாகி ஊளையிட்டது கேட்டு நடுங்கி, "நெறியின் நீங்கியோர் நீரல கூறினும், அறியாமை என்றறியல் வேண்டும்" என்று கோவலன் வாயிலாகக் கூறும் அடிகள்—களைபறிப்போர் பறித்து வரப்பிலே போட்ட குவளைப் பூவின்மேல், தளர்ச்சி மிகுதியால் கண்ணகி கால்களை வைத்து விடக்கூடும். அதனால் அப்பூவிலேயுள்ள தேனை எடுக்குமாறு புகுந்த வண்டு இறக்கவும் கூடும் என்று கவுந்தியடிகள் வாயிலாக அருள் அறங் கூறும் அடிகள்—கோவலன் இறப் புக்குக் "காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன், கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து" என்று இரங்கும் அடிகள்—ஆயிரவர் பொற்கொல்லரைத் தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி ஊட்டிய கொடுமையைச் சிறிதும் அசைவின்றிக் கூறிச் செல்வாரோ?

செங்குட்டுவனிடம் கண்ணகியார் வரலாற்றைக் கூறும் சாத்தனாரேனும் உயிர்ப்பலி ஊட்டிய வரலாற்றைக் கூறு கின்றாரோ? இல்லை. அவர் கோவலன் கொலையுண்ட உடனேயே சேரநாடு போய்விட்டார் என்று கூறவும் இயல வில்லை. கண்ணகியாரே, கோவலன் இறந்த பதினான்காம் நாள் விண்ணுலகு சென்றார். செல்லுங்காலையில்தான் மலை வேடர்கள் கண்டனர். தற்செயலாக மலைவளங்காண எழுந்த சேர வேந்தனிடம் தாம் கண்ட வியப்புமிக்க நிகழ்ச்சியைக் கூறினர். அதற்கு விளக்கம் தருவதாகத்தான் சாத்தனார் பேசினார். இவையனைத்தும் விரைந்து நடந்தவை என்று கொண்டாலும் இடையீடுபடாமல் தொடர்ந்தவை அல்லவாம்! மதுரையிலே வாழ்ந்த சாத்தனார் இந்நிகழ்ச்சியை அறியாமல் இருந்தார் என்பதும் சால்பில்லை. ஆதலின், உயிர்ப் பலியாகக் கொல்லரையிட்ட நிகழ்ச்சி உண்மையன்றாம். உரைபெறு கட்டுரைக் கூற்றும் பொய்யாம். அடிகள் கருத்துக்கு மாறுபட்ட உரைபெறு கட்டுரை எப்படி அடிகளார் எழுதியது ஆகும்?

சமணரைக் கழுவேற்றிய நிகழ்ச்சி ஒன்று உண்டே! அதுபோல் இதுவும் நடந்திருக்கக் கூடாதோ—எனின் தென் ளுட்டுத் தென்றல் திரு. வி. க. சமணரைக் கழுவேற்றியது பற்றி உரைப்பது காண்க.

"மனச்சான்ருல் ஒரு மன்னனை மாள்வித்த அறம் வளர்ந்த ஒரு நாட்டில் சமணரைக் கழுவேற்றிய மறம் வளர்ந்த தென்னை என்று சிலர் கருதலாம். சமணரைக் கழுவேற்றிய வரலாற்றிற்குப் போதிய அகச்சான்ருதல் புறச்சான்ருதல் உண்டா என்பது முதலாவது சிந்திக்கத் தக்கது. அச் சான்றுகள் கிடைக்கும் வரை சமணரைக் கழுவேற்றிய வரலாற்றை யான் கொள்ளேன்; கொள்ளேன். தேவாரத்தில் போதிய அகச்சான்றில்லை. அந்நாளில் பாண்டிய நாடு போந்த வெளி நாட்டார் சிலர் எழுதிய குறிப்புக்களிலும் அவ்வரலாறு காணேம். திருஞான சம்பந்தருக்கும் பின்னே பன்னூறு ஆண்டு கடந்து எழுதப்பெற்ற சில புராணங்களில் சமணரைக் கழுவேற்றிய கதைகள் சொல்லப்படுகின்றன. அக்கதைகளும் ஒருமைப்பாடுடையனவாயில்லை. ஒரு புராணக் கதைக்கு மற்ருெரு புராணக்கதை முரண்பட்டு நிற்கிறது. இப்புராணக் கூற்றுக்களைச் சரித்திர உலகம் ஏற்குங்கொல்! சரித்திர உலகம் ஏற்றுக்கொள்ளும் முறையில் அல்லவோ சான்றுகள் இருத்தல் வேண்டும்"

"இப்பொழுது ஞானசூரியன் என்னும் ஒரு நூல் தமிழ் நாட்டில் உலவுகிறது. அந்நூற்கண் எடுத்துக் காட்டப்பட்ட திருஞானசம்பந்தர் திருப்பாக்களுள் ஒரு மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது. "அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர் திறங்களைச் சிந்தவாது செயத் திருவுள்ளமே" என்பது தேவாரம். இதன்கண் போந்துள்ள 'திறம்' என்னும் சொல் ஞானசூரியனில் 'சிரம்' என்னும் சொல்லாக மாற்றப் பட்டிருக்கிறது..................அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந் தொல்லை விளைக்கின்றன."

இவ்வுரை மணிகளும் மேற்கோள் விளக்கமும் உயிர்ப் பலியூட்டிய இந்நிகழ்ச்சிக்கும் முற்றிலும் பொருந்துவனவாகும்.

உயிர்ப்பலியிடல் உண்டு என்பதைப் பழந்தமிழ் இலக் கியங்கள் பற்பல இடங்களில் சாற்றிச் செல்கின்றன. பலிபீடம், பலிபீடிகை, பலிமுன்றில், பலிப்புதவு, பலிபெறு வியன்களம், உயிர்ப்பலிமுரசு என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் காட்டு

கின்றன. பூவினைத் தெய்வப்பலியாக இடுவது பூப்பலி. அது போல் உயிர்களை முரசங்களுக்கும், தெய்வங்களுக்கும் பலியாக இடுவது உயிர்ப்பலி, ஆனால் மக்களைப் பலியிடும் வழக்கு இல்லை. அது செய்யப்படின் கொலையாம். வீரங் கருதித் தாமே தம்மைப் பலியிட்டுக் கொள்ளும் இலக்கிய வழக்கினை இவ்வுயிர்ப் பலியூட்டுடன் வைத்து எண்ணுவது முறைமையன்றாம். அதனினும் ஆயிரவரை ஒருங்கு பலியிட்டதாகக் கூறும் இந்நிகழ்ச்சியுடன் பேசவே தகுதியற்றதாம்.

"எல்லா விடத்தும் கொலை தீது" (நான்மணி 93)

என்றும்,

"ஆருயிரைக் கொல்வ திடை நீக்கி வாழ்தல்" (திரிகடுகம் 25)

என்றும்,

"நன்குணர்ந்தார் என்பெறினும் கொல்லார்" (சிறுபஞ்ச. 48)

என்றும் அறநூல்கள் கூற, அறத்தின் தலைமணியாம் திருக்குறள் தோன்றிய நாட்டிலே ஆயிரவரைக் கொன்ற கொடுமை உண்டென்பதே பெரும் இழுக்காகும்.

இது நிற்க. பழமொழி நானூறு என்னும் நூலிலே "இனங் கழுவேற்றின ரில்" என்று ஒரு பழமொழி சுட்டப் பெறுகின்றது. (பழமொழி 188) இது "மாறுகொண்டவர் என்று கருதி ஓர் இனத்தையே கழுவேற்றினர் இல்லை" என்று உறுதியளிக்கின்றது, இல்லையா?

"பொற்றொழிற்கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர் பத்தினிக்கு ஒரு பகல் எல்லை உயிர்ப் பலியூட்டி" என்ற வரிக்குத் தவறாகப் பொருள் கருதிக்கொண்டு விட்டமையால் நேர்ந்த பிழை பாடே இது. ஈரைஞ்ஞூற்றுவர்—"ஆயிரவரை" என்றார் அரும்பதவுரைகாரர், "இரண்டன் உருபு விரிக்க" என்றார் நாட்டார். தீர்ப்படைக் காதை வரிகளுக்குக் கருத்தினைப் பிறழக் கொண்டு உரைபெறு கட்டுரைகாரர் எழுதிய வரிகள் அரும்பத உரைகாரரையும், புத்துரை காரரையும் மயங்கச் செய்து அவர் வழிக்கே இட்டுச் சென்று விட்டன. ஆனால் 'ஈரைஞ் ஞூற்றுவர் பொற்கொல்லரும் பத்தினிக்கு ஒரு நாள் அளவும் உயிர்ப் பலியூட்டினர்' என்று பொருள் கொள்வோமாயின் எவருக்கும் பழி இல்லையாம்.

தம் இனத்தவன் ஒருவன் செய்த தவற்றுக்கு இரங்கி அவ்வினத்தவர் ஆயிரவர் கூடி, இக்கூடாத நிகழ்ச்சிக்காக ஒரு

நாள் முழுவதும் 'உயிர்ப்பலி' யிட்டு வாழ்த்தி வழிபட்டனர் என்று கொள்ளல் தக்கதாம். கற்புக் கண்ணகியாரின் கடுஞ் சினம் தங்கள் இனத்திற்குக் கேடு செய்து விடாமலும், அவர் உள்ளத்தைச் 'சாந்தி' செய்யுமாறும், தங்கள் இனப் பழிக்குக் கழுவாய் தேடுமாறும் இவ்வுயிர்ப்பலி இட்டனர் எனின் குற்ற மாகுமோ ?

இவ்வாறு பொருள் காணுவதைத் தடுத்தது முன்னிற்கும் ஒரு வரியாம். அதனைக் காண்போம்.

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழிற் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி
உரைசெல வெறுத்த மதுரை மூதூர்
அரைசுகெடுத் தலம்வரு மல்லல் காலைத்
தென்புல மருங்கில் தீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
நிரைமணிப் புரவி யோரேழ் பூண்ட
ஒருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள்ஏ றினனென
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்" —சிலம்பு; 27: 127-38

என்பதற்கு வெற்றிவேற் செழியன் ஈரைஞ் ஞூற்றுவரை உயிர்ப் பலியூட்டி அரசுகட்டில் ஏறினன் எனக் கொண்டு விட்டனர். அவ்வளவே. இதற்கு முதல் வரியும் இரண்டாம் வரியும் அமைந்துள்ள நிரலும், உயிர்ப்பலி நிகழ்ச்சியும், உரைபெறு கட்டுரைக் குறிப்பும் பின்னிப் பிணைந்து மாறுபொருள் காணு மாறு செய்துவிட்டன. ஆனல், பொற்கொல்லர் ஆயிரவர் பத்தினிக்கு ஒரு பகற் பொழுதளவு உயிர்ப் பலியூட்டி, புகழ் எங்கும் பரக்கும்படி மிக்க மதுரை மூதூர் தன் அரசினை இழந்து மயங்கும் துன்பமிக்க காலத்தே கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் தென்னாட்டின்கண் குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய உயிர்த் தொகுதியினைக் காவல் செய்யும் முறையானே முதன்மை யமைந்த சிங்காதனத்தின்கண் ஏறினான் என்று உரை கொள்ளின் எவர்மீதும் பழிபோட வேண்டியது இல்லை.

வெற்றிவேற் செழியன் மதுரை மூதூர் அரைசு கெடுத்து அலம்வரும் அல்லற் காலையில் முறைமுதல் கட்டில் ஏறினான் என்பது பொருந்தும். அவன் அரசேற்க வருமுன் இருந்த

மதுரை நிலைமையைக் காட்டும் அடைமொழியே உயிர்ப்பலியிட்ட நிகழ்ச்சியாம்.

''வெற்றிவேற் செழியன் ....அல்லற்காலை'' என இடைவெளி படுகின்றதே என்ற ஐயம் இலக்கியம் பயின்றோர்க்குக் கிளைக்கமாட்டாது. ஏனெனில், இவ்வாறு வருவதற்கு எண்ணிறந்த சான்றுகள் உளவாதலை அறிவர். இவ்வாறு உரை கொள்ளாவிடின், பழிமிக்க ஒரு கொலையால் அரசனும் அரசியும் இறந்துவிட்ட நிகழ்ச்சியை அரியணை ஏறுமுன்னரே மறந்து ஆயிரவர்களை அறமற்றுக் கொன்றான் வெற்றிவேற் செழியன் என்ற பெரும் பழிக்கு ஆளாக நேரிடும். பாண்டியன் அத்தகைய பழிகாரனா? அன்று! அன்று! அவனைப் பழிகாரன் ஆக்கியது 'ஐ' என்னும் ஓர் உருபே. ஆதலால் ஆயிரம் பேர் கொலை ஓர் உருபின் கொலையேயாம்!

இங்குக் கூறியவற்றால் உரை பெறு கட்டுரை அடிகளார் எழுதியது அன்று என்றும், அக்கட்டுரை சிலப்பதிகார உரையாசிரியர் காலத்திற்கு முற்பட்டே எழுதப் பெற்று விட்டது என்றும், அது நீர்ப்படைக் காதை வரிகளைப் பிறழக் கருதிக் கொண்டு கூறப்பட்டது என்றும், அப்பிறழ்ச்சியால் விளைந்தனவே பின்னைய உரைகாரர்கள் உரைகள் என்றும், பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தபின் நாடு அல்லலுற்ற நிலைமையிலே வெற்றிவேற் செழியன் அரைசுகட்டில் ஏறினான் என்றும், அவன் வரு முன்னரே மதுரையிலே வாழ்ந்த பொற்கொல்லர் ஆயிரவர் கூடித் தம் இனத்தினன் புரிந்த பிழைக்குக் கழுவாயாக ஒரு பகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டினர் என்றும், இனங் கழுவேற்றல் பெரும்பழி என்றும், பாண்டியன் பழிகாரன் அல்லன் என்றும் அப்பழி ஓர் உருபால் விளைந்தது என்றும் ஒருவாறு கூறப் பெற்றன.

குறிப்பு: ''கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் **கொண்டு** களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது.'' என்பதாயின் பிழை தவிர்க்கப் பெற்றதாம். **கொண்டு** என்பது **கொன்று** எனத் திரிவது ஏடெழுதுவோரால் நிகழத்தக்கதேயாம். இவ்வாறு கருதின் உரைபெறு கட்டுரைச் செய்தியும் தவறின்றாம். ஆனால், செழியன் தூண்டலால் கண்ணகியார்க்குப் பொற்கொல்லர் உயிர்ப்பலி ஊட்டியதாகப் பொருள் கொள்ள வேண்டிவரும்.

சோழ நாட்டுத் துறைமுகப் பட்டினங்கள்

[டாக்டர் கே. வி. இராமன்]

சேர, சோழ, பாண்டிய மண்டலங்களைக் கொண்ட பண்டைய தமிழகம், மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்தமையால், தொன்று தொட்டுக் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியது. மேற்கே அரேபியா, உரோம் போன்ற மத்தியதரைக்கடல் நாடுகளுடனும், கிழக்கே மலேயா, பர்மா, இந்தோ—சீனு, சீனு போன்ற நாடுகளுடன் பல நூற்றுண்டுகளாக வாணிக, கலாசாரத் தொடர்பு கொண்டிருந்தது. தமிழக இருபுறக்கடற்கரைகளிலும், ஆங்காங்கே துறைமுகப் பட்டினங்கள் இக்கடல் வாணிகத்திற்கு முதன்மையிடங்களாக விளங்கின. மேற்குக் கரையோரத்தில் சேரர்களுக்கு முசிறியும், தொண்டியும், தென்கிழக்குக் கடற்கரையில் பாண்டியர்களுக்குக் காயலும், கொற்கையும் விளங்கியமை போலக் கிழக்குக்கரையில் சோழர்களுக்குக் காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், சோபட்டினம், புதுகே போன்ற பல துறைமுகங்கள் இருந்தன. இக் கடலோரப் பகுதியில் சோழர்களின் ஆதிக்கம் தொன்று தொட்டு விளங்கியதன் காரணமாக இக்கீழக்கரைக்குச் சோழ மண்டலக்கரை என்றே பெயர் வழங்கியது. இதுவே ஆங்கிலத்தில் 'கொரமண்டல் கோஸ்ட்' என்று சொல்லப்பட்டது. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் வாணிகம், நாகரிகம் பரவியதற்குச் சோழ நாட்டுத் துறைமுகங்களும் சோழப் பேரரசும் பெரும் பங்கேற்றன. சோழர் துறைமுகப்பட்டினங்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களிலும், வெளிநாட்டுப் பயணியர் குறிப்புகளிலும் பல அரிய செய்திகள் காணப்படுகின்றன [காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி விவரிக்கும் நூலான பட்டினப் பாலை அந்நகரில் யவனர்கள் அல்லது உரோம நாட்டு வணிகர்கள் தங்கியிருந்ததையும், அவர்கள் ஏற்றிச்சென்ற சரக்குகளைப் பற்றியும் குறிக்கின்றது.] கிறிஸ்தவ நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுதப்பெற்ற "பெரிபுளுசு" என்னும் நூல் சோழ நாட்டிலிருந்த மூன்று முக்கிய துறைமுகப்பட்டினங்களைக் குறிக்கின்றது. அவை: பொதுகே, கமாரா, சோபடமா என்பவை. அவை முறையே புதுச்சேரி, காவிரிப்பூம்பட்டினம், சோபட்டினம் என்கின்ற மரக்காணத்தைக் குறிப்பனவாகும். கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் எழுதப்பெற்ற நூலில், தாலமி என்பவர் காவிரிப்பூம்பட்டினத்தை "கபேரிசு எம்போரியான்"

என்று குறிக்கின்றார். அதே கீழக்கரையிலுள்ள மற்றொரு துறைமுகமாக மயிலாப்பூரையும் ''மயிலார்பா'' என்று குறித்துள்ளார். மயிலாப்பூர் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் கூட ஒரு வாணிகத்தலமாகவும், துறைமுகமாகவும் இருந்தது என்பது, இடைக்காலத்திய கல்வெட்டுக்களிலிருந்தும், 'நந்திக் கலம்பகம்' கலிங்கத்துப்பரணி போன்ற நூல்களிலிருந்தும் நாம் அறிகின்றோம். ''பெரிபுளுசு'' குறிப்பிட்ட 'பொதுகே' அல்லது புதுச்சேரி என்பது உரோம நாட்டு வாணிகர்களுக்கு ஒரு முக்கிய பண்டகசாலையாக இருந்தது. இதன் அருகே அரிகமேடு என்னுமிடத்தில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் இதை நன்கு தெளிவாக்கி உள்ளன. உரோமானியர்களின் வாழ்விடங்களும், வாணிபக் கிடங்குகளும், அவர்கள் விட்டுச்சென்ற வேலைப்பாட்டுடன் கூடிய மட்பாண்டங்களும், அழகிய மதுக்கிண்ணங்களும் இங்கே கிடைத்துள்ளன. சில கிண்ணங்களின் அடிப்பக்கத்தில் உரோமானிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இத்துறைமுகம் கி. மு. முதல் நூற்றாண்டிற்கும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடையே வெளிப்படையாக விளங்கியது. இதேபோன்று மற்றொரு உரோமானிய பண்டகசாலையுடைய துறைமுகமொன்று கடலூருக்குத் தெற்கே 6 மைல் தூரத்தில் நத்தமேடு என்னுமிடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கும் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் ஆய்வுகள் செய்து பல அரிய சான்றுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

சோழ மண்டலத்திலுள்ள மற்றொரு முக்கிய துறைமுகம் நாகப்பட்டினமாகும். இது சங்க காலத்திலும், பிற்காலத்திலும், சிறப்புற்று விளங்கிய துறைமுகமாகத் தெரிகின்றது. குறிப்பாக, இங்கிருந்துதான் தமிழ்மக்கள் கடல்கடந்து சாவகம், கடாரம் போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தனர். அம்மாதிரியே கிழக்குத் தீவுகளிலிருந்து வந்த வணிகர்கள் நாகப்பட்டினத்தில் தங்கி ஒரு பௌத்தப்பள்ளி நிறுவினர் என்று தெரிகின்றது. சீவிசயம் என்ற பெயருடைய பேரரசு மலேயா, சுமத்திரா, சாவகம் முதலான நாடுகளில் நிலவிய காலத்தில் கடாரத்துப் பேரரசன் சீமாரன் விசயோத்துங்கவருமன் சோழநாட்டுத் துறைமுகமாகிய நாகப்பட்டினத்தில் தன்னாட்டு வணிகர்களுக்காகப் பௌத்த விகாரம் ஒன்று எழுப்பினான். தன் தந்தையின் பெயரால் ''சூடாமணி வர்ம விகாரம்'' என்று அதற்குப் பெயரிட்டான். பிறகு அதே மன்னன் இராச ராசப் பெரும் பள்ளி, இராசேந்திரப் பெரும்பள்ளி, என இரண்டு பெரும்

பள்ளிகளை எழுப்பியதாக அறிகின்றோம். இப் பள்ளிகளுக்கும், இங்கு வாழ்ந்த வெளி நாட்டுக் குடிமக்களுக்கும் சோழப் பெருவேந்தர்களான இராசராசனும், இராசேந்திரனும் முதலாம் குலோத்துங்கனும் பல மானியங்களும் நன்கொடைகளும் அளித்துப் போற்றினர்.

காவிரிப்பூம்பட்டினம் :

சோழர் துறைமுகப்பட்டினங்களில் தொன்மையும் சிறப்பும் பெற்று விளங்கியது பூம்புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமே யாகும். காவிரியாறு கடலுள் புகுமிடத்தில் அமைந்தமையால், புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம் என்று பெயர் வழங்க லாயிற்று. சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி புரிந்த கரிகால்வளவன் காலத்தில் இத்துறைமுகப்பட்டினம் முழுப் பொலிவுடன் விளங்கியது. இந் நகரின் அமைப்பு, செல்வ வளம், அங்கு வாழ்ந்த மக்களின் நற் பண்புகளைப் பற்றியெல் லாம் பழம் பெரும் தமிழ் நூல்களான, அகநானூறு, புற நானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை விரிவாகப் பகர்கின்றன.

இக்காலத்தில் ''பட்டினம்'' என்றால் சென்னைப் பட்டினத்தை நாம் நினைவு கொள்வது போல, அக்காலத்தில் பட்டினம் என்றால் மக்கள் மனத்தில் காவிரிப்பூம்பட்டினம் தான் நிலைபெற்றது. இக் காரணத்தினாலேயே இவ்வூரைப்பற்றி, எழுதப்பெற்ற நூல் 'பட்டினப்பாலை' என்றே வழங்கியது. இது மட்டுமா ? உரோமானியரின் குறிப்புகளிலும் இது சிறப்பாகப் பேசப்படுகின்றது. இஃது ஒரு பெரும் வியாபாரத்தலம். ''எம்போரியான்'' என்று தாலமி குறித்துள்ளார். இலங்கையில் தோன்றிய ''மகாவமிசம்'' என்ற நூலும் இஃது ஒரு முக்கிய பட்டினம் என்று குறிக்கின்றது. சங்க காலத்திற்குப் பிறகு எழுதப்பட்ட பௌத்த நூலான ''அபிதம்மாவதாரம்'' காவிரிப் பூம்பட்டினத்தை அழகாக வருணிக்கின்றது.

இயற்கைத் துறைமுகம் :

கடல் வழியே வந்த மரக்கலங்கள் கரையளவும் வந்து பண்டங்களை ஏற்றிச் செல்லுவதற்கு ஏற்ற இயற்கைத் துறைமுக மாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது. இங்கு வரும் கப்பல்கள் பாய்மரங்களைத் தாழ்த்தாமல் கரையினை அணுகின என்று புறநானூற்றுப் பாடலொன்று தெரிவிக்கின்றது.

"மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது :
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்."

இரவில் திசை தெரியாது செல்லும் மரக்கலங்களை அழைக்கும் கலங்கரை விளக்கமும் அங்கு இருந்ததாம். கப்பல்களில் வந்த பொருள்களைப் பண்டகசாலையில் ஏற்றவும், உள்நாட்டுப் பொருள்கள் வரம்பு தெரியாதவாறு ஒன்றுடன் ஒன்று சேர்ந்து குவிந்திருந்தனவாம். இவற்றின் பொதி மூட்டைகளை மதிப்பிட்டு, சுங்கக் காவலர்கள் சோழர் சின்னமான புலிப்பொறி பொறித்து, அடுக்கி வைத்தனர். அங்குக் கடல் வழியாகவும், நிலவழியாகவும், வந்த பொருள்கள் என்ன?

இதோ நமக்குப் பட்டினப்பாலை விடையளிக்கின்றது :

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி."

மேற்குக் கடலோரப் பகுதியிலிருந்து கடல் வழியாகக் குதிரைகளும், மிளகுப் பொதிகளும் வந்திறங்கின. வடக்கு மலையிலிருந்து மணியும், பொன்னும், மேற்கு மலை அல்லது மைசூர்ப் பகுதியிலிருந்து அகிலும் சந்தனமும், பாண்டிய நாட்டிலிருந்து முத்தும், கீழைக்கடலிலிருந்து பவழமும் இங்கு வந்திறங்கினவாம். இவையெல்லாம் உரோமானியர் மிகவும் விரும்பி வாங்கினராதலால், ஏற்றுமதிக் கென்றே இவை இங்குக் கொண்டு வரப்பட்டன போலும். தவிர, ஈழம் அல்லது இலங்கையிலிருந்த பலவித உணவுப் பொருள்களும் இங்குக் கொண்டு வரப்பட்டன. அதேபோல், கடாரம் போன்ற நாடுகளிலிருந்து தமிழ் வணிகர் பொருள்களை இங்குக் கொண்டு வந்தனர். இதையே "காழகத்து ஆக்கம்" என்று பட்டினப்பாலை குறிக்கின்றது.

"கங்கை வாரியும்" என்ற சொற்றொடர் வடக்கேயுள்ள கங்கையாற்றுத் துறைமுகங்களுடனும் அவர்கள் வாணிபம் செய்ததைக் குறிக்கும். இவற்றினால், பலதிசைகளிலிருந்தும் வெளிநாட்டு உள்நாட்டு வணிகர்கள் இங்கு வந்து கூடினர்

என்பது தெரிகின்றது. வெவ்வேறு மொழி பேசிய வெவ்வேறு நாட்டுக் கப்பல் வாணிகர் வந்து தங்கினுர்கள் என்று பட்டினப் பாலேயே கூறுகின்றது.

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்".

காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்பைப்பற்றிச் சிலப்பதி காரம் மிகச் சுவையான குறிப்புகளே நமக்குத் தருகின்றது. இப் பெரு நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பெரும் பிரிவுகளுடையதாய் விளங்கியது. பரதவர்களும், வெளிநாட்டு வணிகர்களும், பிறரும் கலந்து வாழ்தற்குரிய வகையில் அமைந்த கிழக்குப்பகுதி மருவூர்ப்பாக்கம் எனப் பட்டது. மேற்கே, சற்றுத் தொலேவில், அரசரின் அரண் மனேயும், அதனேச் சூழ அமைந்த பெருந்தெருக்களேயும் கொண்ட பட்டினப்பாக்கம் என்னும் பகுதி இருந்தது. இவ்விரு பகுதிகளுக்கிடையே ஒரு சோலே அமைந்திருந்ததாம். அங்கு தான் பகற்காலத்தே இயங்கிய கடை வீதி இருந்ததாம். இதுவே நாளங்காடி என்று வழங்கிற்று.

பட்டினப்பாக்கத்தில் என்ன என்ன அமைந்திருந்தன? மன்னவன் வாழும் அரண்மனேயும், அதனேச் சூழ அமைந்த இராசப் பெருந்தெருவும் அமைச்சர் படைத் தலேவர் முதலிய அதிகாரிகளின் இருப்பிடமும், பெருங்குடி வணிகர் வாழும் பெருந் தெருக்களும், கலேச்செல்வர்களும், மறையோரும் வாழ்ந்தனர்.

"கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோ ரிருக்கையும்..."

என்று கூறிக் கொண்டே போகின்றது சிலப்பதிகாரம்.

கடற்கரையை யொட்டியமைந்த மருவூர்ப்பாக்கத்தில் கப்பல் மூலமாக வந்த வெளிநாட்டு வாணிகர்கள் தம்முள் வேறுபாடின்றித் தங்கி வாழ்ந்தனராம். தவிர, இங்குதான் பல தரப்பட்ட தொழிலாளர்களும் வாழ்ந்தனர். அழகிய ஆடைகளே நெய்த பட்டுச்சாலியர், பவளம், மணிகள், பொன் ஆகியவற்றை அணிகலன்களுடன் வைத்து ஒப்பு நோக்கி மதிப்பிட வல்லாரும், வெண்கலத்தொழில் செய்வோர், தச்சர், கொல்லர், ஓவியர், சிற்பிகள், குழல், யாழ் முதலிய கருவிகளேக்

கொண்டு இசையினை வளர்க்கும் குழலர், பாணர் போன்ற கலைஞர்களும் இங்கு வாழ்ந்தனராம்.

காவிரிப்பூம்பட்டினம் வெளி அமைப்பின் அழகு மட்டும் கொண்டு விளங்கிய நகரமன்று. அங்கு வாழ்ந்த மக்கள் நற்பண்புகளின் உறைவிடமாக இருந்தனர். வணிகப் பெரு மக்களின் பெருமைகளைப் பட்டினப்பாலை எழுதிய உருத்திரங் கண்ணனார் பெருமிதத்துடன் கூறுகிறார். இவர்களது நடு நிலைமைக் கொப்பாக உழவர்கள் நுகத்தடியின் நடுக்கோலைத் தான் சொல்லுதல் வேண்டும். தாம் கொள்ளும் சரக்கைத் தாம் கொடுக்கும் பொருளுக்கு மிகையாகக் கொள்ளாது, கொடுக்கும் சரக்கைத் தாம் வாங்கும் பொருளுக்குக் குறையாகக் கொடாமல், ஊதியத்தை வெளிப்படையாகச் சொல்லி வாணிகஞ் செய்து பொருள் ஈட்டினராம்.

இவ்வளவு செல்வச் செழிப்பும், சான்றோரும், கலைஞர் களும் வாழ்ந்து சிறப்பித்த இம் மாநகரம், கடல் வாணிபத்தால் பெருமை அடைந்தது போலவே கடல் சீற்றத்தால் அழிவுற்றது என்று மணிமேகலை கூறும் செய்தி நம்மைக் கலங்கச் செய் கின்றது. நாம் இன்று அங்குக் காணும் காட்சி என்ன? காவிரிப்பூம்பட்டினம் என்றதொரு மீனவர் குப்பம் தான் அங்கே இன்று எஞ்சியுள்ளது. காவிரியாறு, பல்வேறு ஆறுகளால் பிரிக்கப்பட்டமையால், ஒரு சிறு வாய்க்கால் போன்றுதான் இப்பொழுது ஓடுகின்றது. ஆனால், இப்பொழுது இருக்கும் கீழூர், மேலூர், பல்லவனீச்சரம், சாய்க்காடு போன்ற பகுதிகள், காவிரிப்பூம்பட்டினத்தின் பாகங்களாக இருந்தன என்பதை அங்கே காணக்கிடக்கும் கல்வெட்டுக்களால் நாம் அறிகின் றோம். ஞானசம்பந்தரும் பல்லவனீச்சரத்தைப் "பூம்புகார்ப் பல்லவனீச்சரமே" என்று பாடியுள்ளார். அண்மையில் மத்திய தொல்பொருள் ஆய்வினர் இப்பகுதியில் செய்த அகழ்வாராய்ச் சியின் வாயிலாகப் பல அரிய சான்றுகள் நமக்குக் கிடைத் துள்ளன. குறிப்பாகச் சிறு தோணிகளைக் கட்டுவதற்கேற்ற ஒரு முன் துறையும், ஓர் அழகிய நீர்த் தேக்கமும், ஒரு பெரிய பௌத்தப் பள்ளியும் கண்டெடுத்துள்ளனர். புத்தபிரானின் அழகிய வெண்கலச் சிற்பமும் கிடைத்துள்ளது. தவிர, புலிச் சின்னமிட்ட சோழர்காசுகளும், உரோமானியர் விட்டுச் சென்ற அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய மட்பாண்டங்களும், உரோ மானிய நாணயமும் கிடைத்துள்ளன. இவையெல்லாம் இலக்கியச் சான்று பலவற்றையும் மெய்ப்பிக்கும்படி அமைந் துள்ளன.

———

இசையில் காலக் கணிப்பு

[பேராசிரியர் வீ. ப. கா. சுந்தரம். எம். ஏ.]

காலக் கணிப்பு :

'காலப் பிரமாணம்'—என்பது காலத்தின் அளவு. 'காலக் கணிப்பு'—என்பது இசையின் காலத்தைப் பல்வேறு வகையாக வகுத்தும், வகுத்தவற்றைத் தொகுத்தும், தொகுத்தவற்றை அடுக்கியும் இயக்குவதே ஆகும். மிக நுண்ணிய காலச் சிற்றளவையை 'மாத்திரை' என்பர். ஒன்று எனும் எண்ணிக் கைக்குள் நான்கு கால் மாத்திரையும், எட்டு அரைக்கால் மாத்திரையும் அமையும். எ-டு:—'தகதிமி' அல்லது 'சரிகம' என்பதில் 4 எழுத்துக்கள் அல்லது 4 ஒலிப்புகள். 'தகதிமி' என்பது—மத்தள ஒலிப்பு. 'சரிகம' என்பது—ஸ்வர (கோவை) ஒலிப்பு. மாத்திரை அளவிலே நுண்ணியதாக ஒலிக்கும் ஒலிப்பை—'ஒலியன்' எனக் கூறுதல் வேண்டும். ஒலியன் என்பது சிறிய ஒலிப்பு. சில ஒலியன்கள் சேர்ந்தது ஓர் எண்ணிக்கை.

தகதிமி = 4 ஒலியன் = 1 எண்ணிக்கை

சரிகம = 4 ஒலியன் = 1 எண்ணிக்கை

இங்கு ஓர் ஒலியன் = $\frac{1}{4}$ எண்ணிக்கை. இனி, ஓர் எண்ணிக்கைக் காலத்துள் 8 ஒலியன்கள் விரைவாக ஒலிக்க லாம். எ-டு:—

கிடதக தரிகிட = 8 ஒலியன் = 1 எண்ணிக்கை

சரிகம பதநிச = 8 ஒலியன் = 1 எண்ணிக்கை

இங்கு ஓர் எண்ணிக்கைக்குள் மிக விரைந்து 8 ஒலியன் ஒலிப்பதால் ஓர் ஒலியன் = $\frac{1}{8}$ எண்ணிக்கை. இவ்வாறு கணிப் பதைக் காலக் கணிப்பு என்பர். காலக் கணிப்பு என்பது (1) காலத்தின் பகுப்பு, (2) காலத்தின் விரைவு, (3) காலத் தின் அமைப்பு, (4) காலத்தின் அடுக்கு என நான்கு வகைப் படும். இவை நான்கும் பல்வேறு செய்திகளை உட் கொண்டவை.

I. காலப் பகுப்பு என்பது ஒருகால எண்ணிக்கையை எத்தனை வகையாகப் பகுக்கலாம் என விளக்குவதே. இரண்டு எண்ணிக்கையை, எத்தனை வகையாகப் பகுக்கலாம்? ஓர் எண்ணிக்கைக்கு 4 எழுத்து அல்லது 4 ஒலியன்கள் எனவும், ஓர் ஒலியனுக்கு ஒரு மாத்திரை எனவும் கொண்டு, பகுப்பு வகைகளைக் காட்டுவோம் :

2. எண்ணிக்கையின் பகுப்பு

கணக்கு	சொல்	மாத்திரை
1. $1+1$	தகதிமி + தகதிமி	$4+4=8$
2. $\frac{1}{2}+\frac{3}{4}+\frac{3}{4}$	தக + தகிட + தகிட	$2+3+3=8$
3. $\frac{3}{4}+\frac{1}{2}+\frac{3}{4}$	தகிட + தக + தகிட	$3+2+3=8$
4. $\frac{3}{4}+\frac{3}{4}+\frac{1}{2}$	தகிட + தகிட + தக	$3+3+2=8$
5. $\frac{3}{4}+1\frac{1}{4}$	தகிட + தகதகிட	$3+5=8$
6. $1\frac{1}{4}+\frac{3}{4}$	தகதகிட + தகிட	$5+3=8$
7. $1\frac{1}{2}+\frac{1}{2}$	தகதரிகிட + தக	$6+2=8$
8. $\frac{1}{2}+1\frac{1}{2}$	தக + தகதரிகிட	$2+6=8$
9. $\frac{1}{2}+\frac{1}{2}+\frac{1}{2}+\frac{1}{2}$	தக + திமி + தக + திமி	$2+2+2+2=8$
10. $1\frac{3}{4}+\frac{1}{4}$	தகதிமிதகிட + தொம்	$7+1=8$

இரு எண்ணிக்கைக்குள், இங்குக் காட்டிய பகுப்புப் போன்றே, 3, 4, 5 முதலிய எண்களுக்கும் பகுத்தல் வேண்டும்; தாளங்களுக்கும் பகுத்தல் வேண்டும்; ஒன்றுக்குப் பகுத்துப் பழகிக் கொள்ளப், பிற யாவும் தாமே எளிதில் வரும். இந்தப் பகுப்புகளைப் பயிலும் முறை உண்டு. இக்'காலப் பகுப்பு' வழியாக ஸ்வரங்களையும் அடுக்கிப் பயிலப் பயில ஸ்வரம் பாடும் திறன் மிக விரைவில் உண்டாகும். காலப் பகுப்பறிவு இல்லாமல் ஸ்வரம் பாடுவது இன்பம் பயக்காது. அது முறையும் அன்று; நெறியும் அன்று. எனவே காலப் பாகுபாட்டு அறிவு, இசையில் மிக மிக உயர்ந்தது; இசையின் எல்லாத் துறைக்கும் பயன் படுவது.

II. கால அமைவு என்பது காலத்தின் வடிவ அமைப் பாகும்; இவற்றைச் சதுஸ்வரம், திஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் என்பர். இவற்றிற்குரிய தமிழ்ச் சொற்கள் என்ன?

சதுஸ்ரம் = நான்மை அமைவு; திஸ்ரம் = மும்மை அமைவு; கண்டம் = ஐம்மை அமைவு. மிஸ்ரம் — எழுமை அமைவு; சங்கீர்ணம் — ஒன்பான் அமைவு. (தமிழ்ச் சொற்களையும் தமிழையும் வெறுக்கும் இசையறிஞர்கள் உண்டு. தாயை வெறுக்கும் இயல்புக்கு நாம் என்ன செய்ய இயலும்!) இந்த ஒவ்வோர் அமைவுகட்கும் சிற்றெல்லையும் பெருக்கு எல்லையும் உண்டு. எ-டு: ஐம்மைக்கு — எண்ணிக்கை ஐந்தாயினும், இதன் சிற்றெல்லை $1\frac{1}{4}$ எனவும் அதிற்பாதி ($\frac{5}{8}$) எனவும் கொள்ள லாம் ($1\frac{1}{4} \times 2 = 2\frac{1}{2} \times 2 = 5$). இவ்வாறே பிற அமைவுகட்கும் கொள்க. கால அமைவு அல்லது கால அமைப்பு என்பதன் கூறுபாடு 'தாளம்'. 'தாளத்தை இப்போது வகைப்படுத்தி யுள்ளது பகுப்பு நெறி முறைக்குப் (Principles of classification) பொருந்துமா?—இது நடைமுறையில் எந்த அளவுக்குப் பயன் படுவது?—ஏன் பெரிதும் பயன்படவில்லை?'—என்பன ஆய்வுக் குரியன.

III. **கால விரைவு** என்பது ஓர் எண்ணிக்கைக்குள் எத்தனை ஒலியன்கள் அல்லது மாத்திரைகள் ஒலிக்கின்றன எனக் கணிப்பதாகும்.

ஒலியன் என்பது முன்னர்க் கூறியது போன்று ஒரு சிற்றளவு ஒலிப்பு. இது, 'த' 'தொம்', 'தின்' போன்ற மத்தளச் சொல்லின் ஒலிகளாகவோ, ச, ரி, க, ம, ப போன்ற ஸ்வரங்களின் ஒலிகளாகவோ இருக்கலாம். ஒவ்வோர் ஒலியனும் $\frac{1}{8}$ முதல், $\frac{1}{4}$, மாத்திரை வரை ஒலிக்கலம்; இவற்றை எழுதுவதற்கு முறையுண்டு. இசையின் கால விரைவை, ஒன்ரும் காலம், இரண்டாம் காலம்—என 6 காலம் வரை பிரிப்பது மரபு. காலத்தைக் காட்டுவதற்கு—எழுத்துக்களுக்கு மேலே நெடுங்கோடிட்டுக் காட்டும் முறை அழகானதன்று; வசதியான தன்று; பல காலங்களைக் காட்டுவதற்கு—தலைக்கோடு இட்டுக் காட்டும் முறை சிறந்ததன்று. இனி, இசையில் நடை வேறு, கதி வேறு. இங்கு விரிக்கில் பெருகும்.

IV. **கால அடுக்கு** என்பது கால அமைவுகளை அஃதாவது மும்மை, நான்மை, ஐம்மை முதலிய அமைவுகளைப் பல்வேறு வகையில் அடுக்கியும் பின்னியும் நடத்திக் காட்டுவதே. எடுத்துக் காட்டாக $1\frac{1}{4}$ ஐ நாலுமுறை அடுக்கினுல் அது 5 எண்ணிக்கையாகும். கால அடுக்கினுள்—கோவை, முகரா, தீர்மானம், முத்தாய்ப்பு, விரிப்பு (பிரஸ்தாரம்) முதலிய யாவும் அடங்கும்.

எனவே தொகுப்பாகக் கூறினல் :—(1) காலப் பகுப்பு என்பது ஒவ்வொரு தாளத்தையும் பல்வேறு வகையில் பகுத்துக் காட்டுவதும், ஒரு பாடல் ஆவர்த்தனத்தைப் பகுத்துக் காட்டுவதும், சில தாள எண்ணிக்கையைப் பகுத்துக் காட்டுவதும் ஆகும் . (2) கால அமைவு என்பதில் காலத்தின் வடிவங்கள்—அஃதாவது தாளங்களும், ஐம்மை, மும்மை (கண்டம், திஸ்ரம்), போன்ற வடிவங்களும் இதில் அடங்கும். (3) கால விரைவு என்பது—ஒலியன்களின் வேக ஒலிப்பைச் சுட்டும். (4) கால அடுக்கு என்பது திஸ்ரம், கண்டம்—முதலியவற்றை அடுக்கி நடத்தும்—யதி, முகரா, தீர்மானம் முதலியன யாவும் கொண்டது.

வேறுவகையில் கூறினல், காலக் கணிப்பு என்பதில் பல்வேறு தாளங்கள், $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ இடங்கள், டேக்கா வகைகள், கோவைகள், தீர்மானங்கள், முத்தாயிப்புகள் யதிகள், முகராக்கள், விஸ்தரிப்புகள், குறைப்புகள் ஒன்ரும், இரண்டாம் முதலிய காலங்கள். பிரஸ்தாரங்கள், அறுதிகள் முதலியன யாவும் அடங்கும்.

காலக் கணிப்பின் அறிவு—ஸ்வரம் பாடுவதற்கும் பாடல்களை இசையில் அமைப்பதற்கும், வயலின், மத்தளம், கஞ்சரா, கடம் முதலிய கருவிகளை இயக்குதற்கும் இன்றியமையாதது. ‘காலக் கணிப்பு நூல்’—சிலர் நினைக்கலாம் மத்தளம் முழக்குவதற்கு மட்டும் பயன்படுவது என்று. அன்று, அன்று. அந்த நூல் இசைத்துறை அனைத்திற்கும் இன்றியமையாது பயன்படுவது. காலக்கணிப்பு நூல் அதிகாரங்களுள் சில மட்டும் இங்குச் சுருக்கமாகச் சுட்டலாம் :

1. இசை மாத்திரையும் எண்ணிக்கையும்.

2. இசைக் காலத்தை எழுதும் முறை.

3. டேக்கா என்பது என்ன? அதன் வகைகள்.
   4 எழுத்து (மாத்திரை) டேக்காவை—12 வகையாகப் பிரிக்கலாம்.

4. தாளங்களும் வகைகளும்.

5. பல்லவி, அநுபல்லவி, சரணம், முடுகு முதலிய பாடல் உறுப்புகளை அமைக்கும் முறை.

6. தனி ஆவர்த்தன அமைப்பு வகைகள்.

7. கோவைகளை (கோர்வை—தவருய சொல்)—2, 3, 4 ஆவர்த்தத்துள்—அமைக்கும் பல்வேறு முறைகள்.

8. யதிகளும் அவற்றின் உருவும்.

9. 2, 3, 4, 5, 6, 7, 8 எண்ணிக்கைக்குள் அறுதிகள் அமைப்பும், அவற்றையே ஸ்வரமாகப் பாடுதலும்.

10. பிரஸ்தாரம்—அகண்டப் பிரஸ்தாரம், என்பதன் இலக்கணம். (பிரஸ்தாரம்=விரிப்பு, விருத்தி).

11. மொகராவின் இலக்கணமும் வகையும்.

12. முத்தாயிப்பு—அல்லது முடிப்பு முறைகள்.

13. கீர்த்தனைகளுக்கு முழக்கும் முறைகள்—கீர்த்தனையும் நடையும், கீர்த்தனையும் தொடக்க இடமும், கீர்த்தனையில் அறுதியிடம். கீர்த்தனையைக் காலப்படி அலகிடுதல்.

14. குறைப்பு—என்பதன் இலக்கணம்—வகை. ஆதியில் கண்டக் குறைப்பு முதலியன.

மேற்கண்ட செய்திகள் வாய்ப்பாட்டிற்கும், ஸ்வரம் பாடுவதற்கும், பாடல்கள் பாடுவதற்கும் பெரிதும் பயன்படும். 'காலம் தான்—இசையின் தாய்'. அதுவே அடிப்படையும் கொடு முடியுமாகும். மேலே குறித்துள்ள 14 செய்திகளைப் பற்றி விரிவான, ஒழுங்கான, தெளிவான செய்திகள்—நெறிமுறையாக எழுதி வெளிவராமல் இருக்கின்றன.

இசைப் பேராசிரியன்மார்கள் இசை நுணுக்கங்களையும், பெரியார்கள் கண்டு பிடித்தவற்றையும் மூடுமந்திரமாக, ரகசியமாக வைத்துக்கொண்டு வருவது கலை வளர்ச்சிக்குத் துணை புரியாதது. அஃது இசையைப் புதைத்து வைப்பதாகும். புதைக்குழிக்குள் போகும் முன்னர்—''தாம் கற்ற அறிவு—தாரணி பரவுக'' என்போரே இறை அருள் பெறுவோர். சில இசையாசிரியன்மார்கள், தம் மாணவருள் ஓரிருவர்க்கு மட்டும் இசை நுணுக்கங்களைக் கற்றுத்தந்து மறைகின்றனர். குருமாணவப் பரம்பரையில் மூடுபொருளாக வரும் செய்திகளை—நூலாக்குவதும்—அனைவர்க்கும் உதவுவதும், பெரும் இசைத் தொண்டாகும். இசைத் துறையினர்—பணக்காரரல்லர்; இசைநூல்

துணைக் கொண்டு தாமே கற்றுத் தேர—பணம்பெற—இசைக் கலையில் மகிழ—விரும்புவோர் தமிழ்நாட்டிலே பலர்.

மற்றொரு சிறப்புச் செய்தி: இசைக் கலைச் சொற்கள் எல்லாம் வடசொற்கள். எடுத்துக்காட்டாக, ராகம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், பிரஸ்தாரம், டேக்கா, பரன் முதலிய நூற்றுக் கணக்கான சொற்கள் வடசொற்களே. தமிழர்க்குத் தமக்கென இசை அறிவு இல்லையா? தமிழர் இசையறிவு அற்றவர்களா? உண்டு என்றால்—இசைத்துறைத் தமிழ்ச்சொற்கள் எங்கே? எனவே தமிழில் சொற்கள் உண்டு. அவற்றை ஆட்சிக்குக் கொண்டுவரத் தமிழ்ப் பகைவர்கள் மறுக்கின்றார்கள். தமிழன்பர்களோ தூங்குகின்றனர். முதன் முறையாக இசைத் துறைத் தமிழ்ச் சொற்களைத் தொகுத்து வெளியிடுபவர் சைவ சித்தாந்தக் கழகப் பெருந்தகை—வ. சுப்பையா அவர்களே. மூலைமுடுக்குகளில் மறைந்த தமிழ் நூல்களைப்—பணமிழப்பினும் வெளியிடுவதும், தமிழ் வளரப் புதுத்துறை காண்பதும் போன்ற அருட்செயல்கள் கழகம் என்னும் கவின்மிகு சுனையினின்றும் மலர்கின்றன. கழக மின்றேல், எத்தனையோ தமிழ் நூற்கள் நல்லுரை கண்டிரா. நல்ல மெய்ப்பையும் (கட்டடமும்) கண்டிரா. குறள் பரவியிராது.

மிகப் பழைய முறையில் இசைநூல்கள் இன்று வெளி வந்துள்ளன. இசைத் துறைச் செய்திகளை வகுத்து வகைப் படுத்திக் கூறும் முறைகள் இசை நூற்களில் இல்லை. ஒரே ஓர் எடுத்துக்காட்டு மட்டும் அதற்குக் கூறுகின்றேன். ''டேக்கா'' என்பது மத்தளத்தில் முழக்கும் ஒருவகைச் சொற்கள். ''டேக்கா'' பிற நாட்டுச் சொல். அதற்குரிய தமிழ்ச் சொல் எது? ஓர் எண்ணிக்கைக்கு நாலு மாத்திரையாகக் கொண்ட முழவுச் சொல் — தகதிமி, தரிகிட, தகசணு முதலியன. இவற்றுள் நாலு எழுத்துக்கள் அல்லது ஒலியன்கள் தொடர்ந்து விடாமல் ஒலிக்கின்றன. இவற்றுள் ஓர் ஒலியன், 1, 2, 3, 4 என்னும் நாலு இடத்தில் விட்டு ஒலிப்பதே டேக்கா. தரிகிட<த, கிட. தகதிமி<த, திமி. இவ்விரு சொல்லிலும் இரண்டாவது இடம் விட்டு ஓசையின்றி ஒலிப்பன. எனவே—துள்ளி ஒலிப்பன. இவ்வாறு, ஓர் இடமோ, 2, 3 இடமோ விட்டுத் துள்ளி ஒலிப்பது—'துள்ளுமம்' அல்லது 'கலிப்பு' எனப்படும். துள்ளுமம் என்பதே 'டேக்கா'. பழம் பாடல் வகையாகிய கலிப்பாவின் ஓர் ஓசை 'துள்ளுமம்' எனப்படும். ''டேக்கா''—நாலு எழுத்துச் சொல்லில் பல வகையாகப் பிறக்கும். இதோ காண்க.

துள்ளுமச்சொல்	விடுபட்ட இடம்	அதன் பெயர்
1. தகதிமி	★ ★ ★ ★	முற்றுத் துள்ளுமம்
2. தகதொம்,	★ ★ ★ ×	ஈறிலித் துள்ளுமம்
3. த. திமி	★ × ★ ★	மேற்கதுவாய்த் துள்ளுமம்
4. ததிம், த	★ ★ × ★	கீழ்க்கதுவாய்த் துள்ளுமம்
5. த, தொம்,	★ × ★ ×	பொழிப்புத் துள்ளுமம்
6. த, , த	★ × × ★	ஒரூஉத் துள்ளுமம்
7. , தகிட	× ★ ★ ★	முதலிலித் துள்ளுமம்
8. , , கிட	× × ★ ★	முதலிணையிலித் துள்ளுமம்
9. கிட , ,	★ ★ × ×	கடையிணையிலித் துள்ளுமம்
10. , கிட ,	× ★ ★ ×	முதலீறிலித் துள்ளுமம்
11. , , , த	× × × ★	முதல் மூவிலித் துள்ளுமம்
12. த , , ,	★ × × ×	கடைமூவிலித் துள்ளுமம்

எனவே நாலு எழுத்துச் சொல்லில் 12 (டேக்கா) துள்ளும வகைகள் அமையும். இதை மட்டிலும் தெளிவாகச் சொல்லப் பயின்றுவிட்டாலே, இசையின் கால அறிவில் செம்பாகம் உணர்ந்து விட்டதாகக் கொள்ளலாம். இதனைப் பயிலும் முறைகள் உள்ளன. இவ்வாறு 12 வகை—டேக்காக்கள் அமைவதை இசை நூல்கள் இதுகாறும் பாகுபடுத்திப் பெயர் கொடுத்துச் சொல்லவில்லை. இத் துள்ளுமப் பெயர்கள் எல்லாம்—பண்டை இலக்கண நூலில் கண்ட பெயர்களே.

சிலப்பதிகார இசைச் செய்திகளையும் கலைத்துறைச் சொற்களையும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் இன்றியமையாதது. "காலக் கணிப்பு நூல்" வெளிவந்த தென்றல்—இசை பயிலும் அறிவு வளர்ந்தோங்கப் பெரிதும் துணை செய்யும். அரும்பு மொட்டாகாதா? மொட்டு மலராகாதா? மலர்ந்தால் மணம் நல்காதா.

"இறைவா போற்றி. இறையருள் கூட்டுக."

———

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக"

—சம்பந்தர்

"பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி" —அப்பர்

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்......"

—சுந்தரர்

உலகநாதர் உலகநீதியும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும்

[ஆபிரகாம் அருளப்பன்]

கழக வெளியீடு ௬௯, நீதிநூற் கொத்து முதற் பாகம் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன் கூடிய நல்ல பதிப்பு. ஆத்திசூடி முதல் நன்னெறி யீருக ஏழு சிறுநூல்களைக் கொண்டது. அதில் ஐந்தாவதாக அமைந்துள்ளது உலகநீதி என்னுஞ் சின்னஞ் சிறுநூல். இதன் முதற் பதிப்பு 1906 இல் சென்னை, பண்டித மித்திர யந்திர சாலையில் அச்சானது போலும். இப்பதிப்பே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியின் பதிப்பாசிரியர்களால் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது.

உலகநீதி

> ''உலக நீதி புராணத்தை யுரைக்கவே
> கலைக ளாய்வருங் கரிமுகங் காப்பு''

என்னும் இரண்டடிக் காப்புச் செய்யுள் ஒன்றையும், எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பதின்மூன்றையுங் கொண்டது. 11, 13 விருத்தங்கள் நீங்கலாக மற்றவை முதன் மூன்றடிகளிலும் நானலு சீர்களில் அடங்கிய ஆருறு நீதிமொழிகளை 'வேண்டாம்' என முடியும் எதிர்மறை வாக்கியங்களாகப் பெற்று ஆசிரியர் தம் நெஞ்சை முன்னிலைப்படுத்தி, வள்ளிபங்கனை வாழ்த்தும்படி ஏவுதலாக நான்காமடி அமைந்துள்ளது. முதல் விருத்தம் வருமாறு :

> 'ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
> ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
> மாதாவை யொருநாளு மறக்க வேண்டாம்
> வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
> போகாத விடந்தனிலே போக வேண்டாம்
> போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
> வாகாருங் குறவருடை வள்ளி பங்கன்
> மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே''.

இங்ஙனம், 1 - 10, 12 ஆகிய விருத்தங்களில் 66-ம் 11-ல் ஒன்றுமாக 67 நீதி மொழிகள் 'வேண்டாம்' என்னும் எதிர்மறை வினைமுற்றைப் பயனிலையாகப் பெற்றுள்ளன. எழுவா யென்ன? நெஞ்சை விளிக்கின்ருராதலின் நீ தோன்ரு எழுவாய்.

> ''இஐ ஆயென வரூஉ மூன்று
> மொப்பத் தோன்றும் முன்னிலைக் கிளவி''

என்பது விதி யாதலின் அது முன்னிலை யொருமை எதிர்மறை வினைமுற்ருகாது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி (Tamil Lexicon 1926) இச் சொல் பற்றித் தெரிவிப்பது வருமாறு :

"வேண்டாம்—இன்றியமையாது வேண்டத் தக்கதன்று என்பது குறிக்கும் வியங்கோள் வினை : ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்''.

ஆனால் 'இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமைய' வாகிய வற்றுள் ஒன்றாகிய வியங்கோட் கிளவி, 'முன்னிலை தன்மையாயீ ரிடத்தொடு மன்னா தாகும்' என்கிறாரே தொல்காப்பியர். அவர் கருத்தை உரையாசிரியர் பின்வருமாறு தெரிவிக்கின்றனர் :—

1. இளம்பூரணர் : முன்னிலை தன்மை இரண்டிடத்தும் செல்வனவாகிய வியங்கோள் வினைச்சொல் சிறுவரவின.

2. தெய்வச் சிலையார் : கடாவுக பாகநின் கால்வல் நெடுந் தேர், எனச் செய்யுளகத்தும் வந்ததாலெனின், நீ கடாவுக என வருதலின் அது படர்க்கைப் பெயர் விளியேற்றவழி வந்த தென்க.

3. சேனாவரையர் : ஆயீ ரிடத்தொடு கொள்ளா தென்னாது, மன்னாதாகும் என்றதனான் அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க.

4. கல்லாடர் : தன்மை முன்னிலை யென்னாது, முன்னிலை தன்மை என்றதனாற் சிறுபான்மை முன்னிலை தன்மைக்கண்ணும் வருமெனக் கொள்க.

இலக்கியச் சான்று : மன்னிய பெருமநீ - புறநானூறு 6; நீ நீடு வாழிய பெருந்தகை - புறநானூறு 55.

இன்னவற்றைக் கருத்திற் கொண்டே பவணந்தி முனிவர்,

> "கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
> இயலு மிடம்பா லெங்கு மென்ப"

என விதி அமைத்தார்.

இவை இவ்வாறிருக்க,

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாரால் இயற்றப் பட்டுப் பாடநூற் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல், ஒன்பதாம் பதிப்பு, பக்கம் 71 - 72 இல் உலக நீதியிலுள்ள 40 நீதிமொழிகளை நானாலு கொண்ட பத்துப் பிரிவாக அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றின் பயனிலை யாகிய வேண்டாம் என்பதை **வேண்டா** என மாற்றிப் பதிப்பித்திருக்கிறார்கள்.

இஃது எங்ஙனம் முறையாகும்? ஓதாம லொருநாளு மிருக்க **வேண்டா** முதலியவற்றில் வேண்டா என்பதன் சொல்லிலக்கண மென்ன ?

பொதுவாக **வேண்டா** என்னுஞ் சொல்

க. பலவின்பால் எதிர்மறை வினைமுற்று ;

ங. பலவின்பால் எதிர்மறை வினையா லணையும் பெயர் ;

ச. ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் (வேண்டாமல்);

ஞ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (வேண்டாத);

ட. செய்யா என்னும் வாய்பாட்டு உடம்பாட்டு வினையெச்சம் ஆகிய இலக்கணங்களை இடத்துக் கேற்பப் பெறும்.

மேலும், வேண்டேன், வேண்டேம், வேண்டாம் ; வேண்டாய், வேண்டீர்; வேண்டான், வேண்டாள், வேண்டார்; வேண்டாது, வேண்டா எனத் தன்மை, முன்னிலை, படர்க்கை எதிர்மறை வினை முற்றுக்களும் **வேண்டு** என்னும் பகுதியடியாகப் பிறக்கும்.

வேண்டாம் என்னும் எதிர்மறை வியங்கோள் வினைமுற்றின் உடம்பாடு வேண்டும் என்பது.—

"வேண்டும் — இன்றியமையாது வேண்டத்தக்கது என்பது குறிக்கும் வியங்கோள் வினை : வேந்தனீயாகி வைய மிசைபடக் காத்தல் வேண்டும்.—சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி (Tamil Lexicon)".

எனவே, உலகநாதர் உலகநீதியில் வரும் **வேண்டாம்** என்னும் வினைமுற்றுக்களை **வேண்டா** என மாற்றிய முறை கேட்டைச் செம்மைப் படுத்தற்கு ஆவனவெல்லாம் அரசினர் உடனே செய்யவேண்டும். அது தமிழ்நலம் பேணுதலும், ஆசிரியர் ஆன்மாவுக்கு அமைதி தருதலும் ஆகும்.


———

குழந்தைக் கவிஞரின் பொன் விழா

கொஞ்சு தமிழால் பிஞ்சு நெஞ்சத்தைக் கொள்ளை கொள்கின்ற குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பொன் விழா 7-11-72 இல் கொண்டாடப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அன்றுதான் அவர் 50 ஆவது அகவை நிறைவெய்தினர். பாட்டிக் கதைகளையும் பழங் கதைகளையும் படித்து வந்த தமிழ்க் குழந்தைகளுக்குக் காலப் போக்கிற்கு ஏற்ற வண்ணம் புதுத்தமிழில் பாடல்களை இயற்றித் தந்தவர் வள்ளியப்பா. குழந்தை இலக்கியம் என்றால் சிலர் வியக்க, சிலர் எள்ளல் செய்ய வியப்புக்கும் எள்ளலுக்கும் துவளாது அஞ்சாது குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்துக் குழந்தை இலக்கியத்திற்கு ஒரு நிலையான பணியைச் செய்தவர் அவர்.

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த இராயவரம் என்னுஞ் சிற்றூரில் 7-11-22 இல் தோன்றியவர் வள்ளியப்பா. பள்ளியில்

பயிலும் போதே பாரதியின் நாட்டுப் பாடல்களைப் பாடித் தம்முடன் பயின்ற மாணவர்கட்கு நாட்டுப்பற்றை ஊட்டியவர் அவர். அப்பொழுது அவருக்கெழுந்த வேடிக்கையாகப் பாட்டெழுதும் ஆற்றலே பின்னர் ஆயிரக்கணக்கான குழந்தைப் பாடல்களை எழுதக் காரணமாக இருந்தது எனலாம்.



பள்ளிப் படிப்பை முடித்த பின் சிலகாலம் 'சக்தி' அலுவலகத்தில் பணியாற்றியபின் நிலையாக 'இந்தியன் பாங்கில்' பணிபுரியத் தொடங்கினர். இன்று அவ்வங்கியின் கிளை முகவராகப் பணியாற்றி வருகின்றார்.

தம் ஓய்வு நேரமனைத்தையும் அவர் குழந்தைகட்காகவே செலவிட்டு வருகின்றார். அவர்தம் முதல் கவிதைத் தொகுதியான 'மலரும் உள்ளம்' 1944 இல் வெளிவந்தது. இந்நூலுக்கு இந்திய அரசின் பரிசும் தமிழ்நாடு அரசின் பரிசும் கிடைத்திருக்கின்றன. 1950 இல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தார். குழந்தைகட்காகப் 'பூஞ்சோலை' என்ற ஏட்டை நடத்தினர். சிறுவர்கட்கு இன்பமூட்டும் வகையில் 'பர்மா ரமணி' என்ற நெடுங்கதையையும் எழுதினர். நல்ல நண்பர்கள், பெரியோர் வாழ்விலே, 'பாட்டிலே காந்தி கதை' போன்ற நாற்பதுக்கு மேற்பட்ட குழந்தை நூல்களின் ஆசிரியராவார்.

"தெள்ளு தமிழில் கவிதைகள்
தேனாய் எழுதித் தந்திடும்
'வள்ளி யப்பா' குழந்தைகள்
மனத்தில் வாழும் கவிஞராம்."

என்று குழந்தைக் கவிஞர்தம் வாழ்க்கையைக் கதையாகக் 'கவிதை தந்தவர் கதை' என்ற நூலில் புலவர் அ. அப்துல் கரீம் பாடியுள்ளது போல வள்ளியப்பா குழந்தைகள் மனத்தில் என்றும் வாழ்வாரென்பது உறுதி.


குழந்தைக் கவிஞர் அவர்கள் பொன்விழா 12-11-1972 ஞாயிறு மாலை 4 மணிக்குச் சென்னை மாணவர் மன்றச் சிவமுத்து நிலையத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள் தலைமையில் நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியுறுகின்றோம். எங்கள் நல்வாழ்த்துக்களை அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட

பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களடங்கிய

இவ்வழகிய நிலைப் பேழையினை



சென்னை, சி. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி மாணவர்கள்

சென்னை, பல்கலைக்கழகத் துணைவேந்தர், கல்வி நெறிக்காவலர்,

தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்கு

அவர்தம் 61ஆம் ஆண்டுப் பிறந்தநாள் 12—10—'72 இல்

அன்புடன் அளித்தனர்.

அப்பேழையினைத் துணைவேந்தரவர்கள்

பல்கலைக்கழக நூலகத்துக்குப்

பரிவுடன் வழங்கியுள்ளனர்.

செய்திகளும் குறிப்புக்களும்

தமிழகப் புலவர் குழு திருச்சிக் கூட்டத்தின் தீர்மானங்கள்

திருச்சியில் *15-10-72* அன்று நடைபெற்ற தமிழ்ப் புலவர் குழுவில் நிறைவேற்றப் பெற்ற பல தீர்மானங்களின் சுருக்கமாவது :

புலவர் குழு 'தமிழ்' என்ற திங்களிதழினை விரைவில் தொடங்குமெனத் தெரிகிறது. ஆண்டுதோறும் நடுவண் அரசு சமக்கிருத, உருதுப் புலவர்களுக்குப் பட்டமும் பணமுடிப்பும் கொடுத்துப் பெருமைப் படுத்துகிறது. இவ்வாறு தமிழ்ப் புலவர் பெருமக்களையும் பாராட்ட வேண்டுமென்று நடுவண் அரசைப் புலவர் குழு கேட்டுள்ளது.

பழம்பெரும் புலவர்களான மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, தேவநேயப் பாவாணர், ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை, கா. அப்பர் துரையார், கி ஆ. பெ. விசுவநாதம், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவ ஞானம் முதலிய பன்னிருவர்கட்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப் பெற வேண்டுமென்று குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திருச்சியில் புலவர் குழுவுக்குச் சொந்தமான கட்டிடத்தில் 'கி. ஆ. பெ. விசுவநாதம் நூலகம்' ஒன்றைத் தொடங்கப் புலவர் குழு தீர்மானித்துள்ளது.

டாக்டர். ந. சஞ்சீவி, திருச்சி அரசப்பனர் ஆகிய இருவரும் புலவர் குழுவின் துணைச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

மறதி யொழிப்புக்கு மருந்து

செய்ப்பூர் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் சுப்பாராவும் டாக்டர் குப்தாவும் சேர்ந்து மறதி யொழிப்புக்குக் குளுமேடிக் அமிலங் (Glumatic acid) கலந்த கலவை மருந்து ஒன்று கண்டுபிடித்திருப்பதாக *23-10-72* 'இந்து' இதழிற் கண்டேன். படிப்பில் மறதி, சோர்வு, தன்னம்பிக்கையின்மை ஆகியவற்றால் துன்புறும் மாணவர்கட்கு அம் மருந்து நல்ல பயன் தருகின்றதாம்.

'துளசி' மறதி யொழிப்புக்குச் சிறந்த மருந்தென்று செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 43 பரல் 4 இல் 'நினைவாற்றலுக்கு மருந்து' என்ற தலைப்பில் பாவலர் பசும்பொற்கிழார் எண்சீரடியாசிரியப்பாவில் இயற்றிய மூன்று செய்யுட்கள் வெளிவந் திருக்கின்றன.

48 நாட்கள் தொடர்பாக ஒருநாள் ஒருபொழுது கூட விடாமல் காலையில் 4 துளசி இலைகளும், மாலையில் 4 இலைகளும் மென்று விழுங்கிச் சிறிது தண்ணீரும் உட்கொள்ளுதல் வேண்டும். இடையில் ஒருநாளோ ஒரு பொழுதோ துளசி இலைகளை உண்ணுவிடில் மீண்டும் 48 நாட்கள் தொடர்பாக முன் சொல்லியபடி உண்ணுதல் வேண்டுமாம். அங்ஙனம் உண்டு வந்தால் மறதியும் மனச்சோர்வும் நீங்கி நினைவாற்றல் பெருகும் என்று கூறியுள்ளனர் பாவலர் அவர்கள்.

"மூளையதன் சோர்வகற்றும் மூலிகையாம் இத்துளசி
நாளைக்கே செய்க நலம்,"

ஆச்சார்யா வினோபா பாவேயின் தேவநாகிரிப் பித்து!

"தேவநாகிரி எழுத்தில் எழுதப்படாமல் எனக்கு வரும் கடிதங்களை நான் படிக்க மாட்டேன். ஆங்கிலம் கூட தேவநாகிரியில் எழுதப்படல் வேண்டும். கல்வித் துறையினர் இந்திய மொழிகள் எல்லாவற்றையும் தேவநாகிரி எழுத்தில் கொணர முயல வேண்டும். தென்னிந்திய மொழிகள் தேவநாகிரி எழுத்தில் எழுதப்படுமானால் மிகு பயன் விளையும். நான் இப்பொழுது சீனம், சப்பானியம், செருமானியம், ஆங்கிலம் ஆகிய மொழி அகராதிகளைத் தேவநாகிரி எழுத்தில் தொகுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். இப்பணிக்கு அரசு உதவி கிட்டுமானால் பெற்றுக் கொள்வேன். இன்றேல் என் சொந்த முயற்சியில் இதனைச் செய்வேன்" என்று 13-10-72 இல் நாகபுரியில் நடைபெற்ற அனைத்திந்தியக் கல்வி மாநாட்டில் ஆச்சார்யா வினோபா பாவே பேசியுள்ளார்.

இவ்விந்தியத் துணைக் கண்டத்தை இந்தி மயமாக்கிவிட வேண்டும் என விரும்பும் தலைவர்களுள் ஆச்சார்யா வினோபா பாவேயும் ஒருவர். ஒலி வடிவும் வரி வடிவும் கூடிய ஒரு மொழியைப் பரப்புவதில் பேச்சு மொழியாகிய வரி வடிவைப் பரப்ப முடியாவிடினும் வரி வடிவத்தை யேனும் மாற்றிவிட்டால் மற்ற வேலையைப் பின்னர்ப் பார்த்துக் கொள்ளலாம் என்னும் நினைப்புப் போலும்.

சட்டமன்றத் தலைவர்கள் மாநாட்டில் மொழிச் சிக்கல்

அனைத்திந்திய சட்டமன்றத் தலைவர்கள் மாநாடு அண்மையில் சென்னையில் நடைபெற்றது. நாடாளுமன்றத் தலைவர் திரு. ஜி. எஸ். தில்லான் இம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இம் மாநாட்டில் உத்தரப்பிரதேச சட்டமன்றத் துணைத் தலைவர் திரு. வாசு தேவசிங் இந்தியில் பேசத் துவங்கினார். அவருக்கு முன் பேசியவர்களெல்லாரும் ஆங்கிலத்தில்தான் பேசினர். எனினும் இவர் மட்டும் "ஓர் அயல் மொழியில் நான் பேசமாட்டேன்" என்றார். அதற்குத் திரு. தில்லான், "இந்தியில் பேசுவதில் தடையில்லை. ஆனால், அப்பேச்சை மொழி பெயர்த்துக் கூற வசதியில்லை: மேலும் பெரும்பான்மையானவர்கள் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்திருக்கின்றனர். இப்போது இது ஒருமொழி நிலவும் மன்றம். எனவே ஆங்கிலத்தில் பேசுதலே நன்று" என்றார். அதன் பிறகு திரு. சிங் ஆங்கிலத்தில் பேசினார்.

உத்தரப்பிரதேசக்காரருக்கு உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலம் அயல் மொழியாம்! ஆனால், அதே நேரத்தில் இத் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் இந்தியைத் தம்முடைய மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! என்னே விந்தை!

கலைக்கூடங்களைக் கலக்கி விடாதீர்கள்!

"தம்முடைய மக்கள் பயனுள்ள கல்வியைப் பெறவேண்டும் என எண்ணுகின்ற பெற்றோர்கள் கல்வி நிலையங்களைத் தெய்வத் தன்மை வாய்ந்த இடங்களாகக் கருதவேண்டும்.

"அரசியல்வாதிகள் பல்கலைக் கழகங்களையும், கல்லூரிகளையும் தம்முடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தி,

அவற்றை வெறுப்புணர்ச்சிகட்குரிய இடங்களாக்கிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்''—என்று, புதுதில்லியில் 29—10—72 இல் ஆந்திரப் பள்ளிக்கூடமொன்றின் வெள்ளி விழாவில் பேசியகாலை இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

குடியரசுத் தலைவரின் இந்த அறிவுரை காலத்தால் தந்த ஒரு சீரிய அறிவுரையாகும். ஆனால், இதனைச் செயல்படுத்துபவர் யார் என்பது தான் இன்றையக் கேள்விக் குறியாக இருக்கின்றது. கல்லூரிகள் என்னும் குட்டையைக் கலக்கி மீன் பிடிப்பதுதான் அரசியல் கட்சிகளின் வேலையாகி விட்டது. மாணவர்களும், பெற்றோர்களும் இந்நிலையை உணர்ந்து தம்மைத்தாம் பாதுகாத்துக்கொள்ளாத வரையில் கலைக்கூடங்களுக்கு உய்வில்லை.

உலகை நோக்கியிருக்கும் பேரிடர்!

''உலகம் என்பது எல்லை காண முடியாததொரு பயணத்தில் ஈடுபட்டிருக்கும் விண்வெளிக் கப்பல். அதனை இயக்கும் பணியில் 350 கோடி பேர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் உலகின் மூலப்பொருள்களைச் செலவழித்துக்கொண்டே இருக்கின்றனர். ஆனால், செலவழிக்கும் மூலப்பொருள்களை ஈடு செய்வதில்லை. இதே நிலைமை நீடிக்குமானால் மக்கள் உண்ண உணவோ, வாழ்க்கைக்கு வேண்டிய வேறு பல பொருள்களோ அற்றுப் போய் அல்லற்பட வேண்டிய காலம் மிக வேகமாக வந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் அந்த அளவுக்கு மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது.

எனவே, விண்வெளிப் பயணத்தில் ஈடுபட்டிருப்போரெல்லாரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதில் பெரிதும் நாட்டம் செலுத்துதல் வேண்டும்'' என்று பேராசிரியர் வெர்னர் வான் பிரான் என்னும் விண்வெளி அறிவியல் அறிஞர் ஒருவர், அண்மையில் வியன்னாவில் கூடிய அனைத்துலக விண் ஆராய்ச்சியாளர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆரியமும் தமிழும் பற்றி ஆளுநர் கருத்து

கடந்த 5-10-72 இல் திருவனந்தபுரத்தில் 'கீதோபதேச கோபுரம்' என்ற ஒரு கோபுரத்தைத் திறந்து வைத்தபோது ஆரிய மொழி பற்றியும் தமிழ் மொழி பற்றியும் சில கருத்துக்களைத் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் வெளியிட்டனர்.

''சமக்கிருத அடிப்படையில் தோன்றிய மொழி ஆரிய மொழி என்று சொன்ன போதிலும், ஆராய்ந்து பார்க்கின்றபோது எல்லாவற்றுக்கும் அடிப்படையாகத் தென்னாட்டிலிருந்து ஒரு நாகரிகம் பரவி வந்துள்ளது என்பது புலனாகும். வேதங்களில் காணப்படும் பல சொற்கள் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டனவே தமிழ் மொழியிலிருந்து 500 சொற்களைச் சமக்கிருதம் கடன் வாங்கியிருக்கிறது'' என்று அவர் கூறியுள்ளார். ஆளுநரின் இக் கூற்று நமக்குப் புதிதன்று. வரலாற்றாசிரியர்கள் இதைவிடத் தெளிவாக அனைத்து இந்திய மொழிகட்கும் அடிப்படை திராவிட மொழிகளே என்று கூறியுள்ளனர்.

மதிப்புரை

கண்மதியன் கவிதைகள்

[ஆசிரியர் : கவிஞர் கண்மதியன். பதிப்பாளர் : கதிரவன் பதிப்பகம், சென்னை-24. விலை ரூ. 3-00.]

மொழி, வீரம், காதல், சீர்திருத்தம், தத்துவம் என்னும் பல பிரிவுகளில் தொகுக்கப்பட்டுள்ள சிறந்த கவிதைகளின் தொகுப்பே இந்நூல். கவிதைகள் இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்து படிப்போர்க்கு உணர்ச்சியூட்டும் வகையில் அமைந்துள்ளது. படித்துப் பார்க்க வேண்டிய பயனுள்ள நூல்.

கவிதை தந்தவர் கதை

[ஆசிரியர் : புலவர் அப்துல்கரீம். வெளியீடு : தமிழ் நிலையம், புதுக்கோட்டை. விலை : ரூ. 3-00.]

தமிழ்க் குழந்தைகளுக்காக இனிமையும் எளிமையும் கூடிய சுவையான பாடல்களைப் பாடிய பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா ஆகிய மூவரின் வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் இந்நூலாசிரியர் புலவர் அப்துல்கரீம் அவர்கள் எழுதியிருக்கும் முறை மிகமிகப் பாராட்டத் தக்கது. கதை சொல்லுவதுபோல் வரலாற்றைச் சொல்லிக் கொண்டு போகிறார். முப்பெரும் குழந்தைக் கவிஞர்களின் வரலாறுகளைச் சிறுவர்கள் சலிப்பின்றிப் படித்துப் பயன் பெற இந்நூல் சிறந்த வழிகாட்டியாகும். பதிப்பு முறை போற்றத்தக்க வகையிலும் கவர்ச்சி தரும் முறையிலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பயனுள்ள நூல். படித்துப் பாருங்கள்.

அமுத அலைகள்

[கவிதைத் தொகுதி—நிறைமதி வெளியீடு, ஈரோடு-1. விலை ரூ. 1-50. அஞ்சல் செலவு 0-50 காசு சேர்த்து ரூ. 2-00 பணவிடை அனுப்பினால் பெற்றுக்கொள்ளலாம்.]

புலவர் கோ. வேங்கடாசலம் என்பவரால் யாக்கப் பெற்றுள்ள இக் கவிதை நூலுக்குக் கவிஞர் புலவர் திரு. தமிழன்பன், பி.ஏ., அவர்கள் வழங்கியுள்ள பாராட்டுரை பெரிதும் சுவைத்து மகிழ்தற்குரிய தொன்றாக வமைந்துளது.

உயிர்த்துடிப்புள்ள சொற்களால் உணர்ச்சிக்கு விருந்தாக அமையும் உரைநடைக் கவிதை வடிவில் அமைந்துள்ள இப்பாராட்டுரை வாய்மை பிறழாமல் பண்பார்ந்த முறையில் இக்கவிதை நூலின் திறத்தினை ஓர்ந்து தேர்ந்து உரைத்துள பான்மை கருத்துச் சுவையாளர்கட்குக் கழிபேரின்பம் தருவதாகும். இத்தகு பாராட்டுரைக்கு இலக்காகும் பேற்றினைப் பெற்ற அவ்வொரு தகைமையே இக்கவிதை நூலுக்கு ஏற்றந் தருவதாகும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மாமாவின் ஆராய்ச்சிகள் (பரிசுபெற்ற நூல்)
—என். கே. வேலன், பி.ஏ.

இயற்கைக் காட்சிகள், உயிரினங்கள், அறிவியல்பொறிகள், உடற்கூறுகள் ஆகியன பற்றி உரையாடல்கள்மூலம் சிறுவர்கட்கு அரிய உண்மைகளை உணர்த்தும்வகையில் அமைந்துள்ளது இந்நூல். படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு. விலை ரூ. 3 75

சிங்கத் தமிழர் சிதம்பரனார்
—மா. சண்முகசுப்பிரமணியம், பி ஏ., பி.எல்.

கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனாரின் சீரிய வாழ்க்கை வரலாற்றைச் சிறுவர்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் உரையாடல் முறையில் அமைத்துள்ள அழகிய நூல். இருவண்ணப் படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு.
விலை ரூ. 4 00

Thirukkural-Translation in English
—by Rev. W. H. Drew & Rev. John Lazarus

குறளின் மாண்பினை அனைவரும் அறிந்து இன்புறுதற்கும், திருக்குறள் மேலும் உலகெங்கும் பரவுதற்கும், ஆங்கிலத்தில் உரை நடையில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கும் இத் திருக்குறள் பெரிதும் பயன்படும். விலை ரூ. 3 00 பரிசுப்பதிப்பு விலை ரூ. 5 00

திருமுருகாற்றுப்படைத்திறன்
—இராவ்சாகிப் திரு. கு. கோதண்டபாணிப் பிள்ளை, பி.ஏ.

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களுள் முருக பத்தியினைப் புகட்டுவது மட்டுமன்றி இலக்கிய நலமிக்கதோர் இனிய நூல். இதனை, இதுகாறும் யாரும் செய்திராத அளவில் சீரிய திறனாய்வு செய்துள்ளார் இந் நூலாசிரியர் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படத்தக்கதும் நூலகங்கள்தோறும் இருக்கவேண்டியதுமான அரிய ஆராய்ச்சி நூல். விலை ரூ. 6 00

விரைவில் வெளிவரவிருப்பவை

முத்துவீரியம்

தொல்காப்பியம் போன்றதொரு இப்பழைய இலக்கண நூல் சிறந்த விளக்கங்களுடன் விரைவில் வெளிவரும்.

யாப்பருங்கல விருத்தி

அமிதசாகரர் இயற்றிய இவ்விலக்கண நூல் உரையுடனும் விளக்கக் குறிப்புரைகளுடன் திருத்தமான பதிப்பாக வெளிவரும்.

பெருந்தேவனார் பாரதம் (உரைநடை இட்டது)

கிடைத்தற்கரிதாயுள்ள பெருந்தேவனார் இயற்றிய பாரத வெண்பா தக்க உரையுடனும் விளக்கக் குறிப்புரைகளுடனும் வரும்,

இலக்கண விளக்கம் (எழுத்தும் சொல்லும்)

இவ்விலக்கண நூல் சிறந்த விளக்கக் குறிப்புக்களுடனும் விரிவான மேற்கோள்களுடனும் வெளிவரவிருக்கிறது.

பதிவு எண்: M. 4899

பிற பதிப்பாளர் வெளியீடுகள்

அழகுக் கலைத்திறன் —செ. வைத்தியலிங்கம், எம். ஏ. தமிழ் இலக்கியங்களைக் கலையுணர்வுடன் கற்கும் வழி வகைகளை 12 தலைப்புக்களில் அழகுபட எடுத்துக் காட்டுகிறார் இந் நூலாசிரியர். விலை ரூ.	3	60
தமிழகப் பழங்குடி மக்கள்—ச. அகத்தியலிங்கம்	2	70
இலக்கிய அணிகள்—சி. பாலசுப்பிரமணியம்	7	00
பரிபாடல் திறன்—இரா. சாரங்கபாணி	6	00
இலக்கியச் சிலம்பு—தா. நடராசன்	8	75
காவ்ய ராமாயணம்—கே. எஸ். சீனிவாசன்	2	70
துரோணர் சபதம்—கவிஞர் வாகரை வாணன்	1	00
கடலோடி—நரசய்யா	5	25
இன்னுஞ் சில நாட்கள்—அரோக மித்திரன்	4	00
விடுதலை—இளவரசு	1	50
மானிடவியல் கலைச் சொல்லகராதி—க. சக்திவேல்	2	50
வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி —அ. மு. பரமசிவானந்தம்	2	50
தமிழகக் கலைகள்—மா. இராசமாணிக்கனார்	4	00
ஞான வயல்—காவிரிநாடன்	4	00
நெருப்பில் புழுத்த புழுக்கள்—காவிரிநாடன்	4	25
குடிமக்கள் காப்பியம்—தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்	3	00
பாரதியார் இதயம்—மணிஜி	3	50
வாரியார் வழங்கும் மணவாழ்வு —திருமுருக கிருபானந்த வாரியார்	6	00
Indo-Aryan Loan Words in old Tamil —S. Vaidyalingam, M.A., Ph.D.	12	00
Dravidian Origins and the West —Dr. N. Lahovary	15	00
A Dictionary of Zoology—Ramalingam, Ph.D.	3	00
The Pandyan Kingdom —K. A. Nilakanta Sastri	25	00
Indian Books in print 1972 3 Volumes (1 set)	200	00
Random House Dictionary (American Edition)	187	50

அப்பர் அச்சகம், சென்னை-1.